| 3. ................................ | ................................ |
| 4. ................................ | ................................ |

10. கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் கமநல சேவைகள் நிலையத்தின் பெயர் : ----.

| பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழறாதவாறு ஒட்டவும். |
|---|

11. **விண்ணப்பதாரரின் கூற்று**.– மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் தவறானதும் உண்மையற்றதும் என நியமனத்திற்கு முன்னர் தெரியவருமாயின், நான் தகுதியற்றவன் ஆவேன் எனவும், நியமனத்தின் பின்னர் தெரியவருமாயின் எவ்விதமான நஷ்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளரினால், பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக எடுக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் அமைந்தொழுகுவதாகவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.– இங்கு கையொப்பம் இடப்பட்டுள்ள ...................................................... என்னும் முகவரியில் வதியும் திரு./திருமதி/செல்வி ..................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவரது கையொப்பத்தை .......................................... ஆந் திகதி என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின்,
பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களின் பொருட்டு மட்டும்)

**திணைக்களத் தலைவரின் கையொப்பம்**

13. விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ..................... .......................................... என்பவர் தற்போது இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் ........................................................ ஆக நிரந்தர/ தற்காலிக/ அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும், அவர் இப்பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப் படுவாராயின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அறியத்தருகிறேன்.

....................................,
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**இணைப்பு இலக்கம் 1**

| மாகாணம் | நகரம் | நகர எண் |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்திய மாகாணம் | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரஎலிய | 06 |
| தென் மாகாணம் | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | அம்பாந்தோட்டை | 09 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் மாகாணம் | குருநாகலை | 18 |
| | புத்தளம் | 19 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 20 |
| | பொலொன்னறுவை | 21 |
| ஊவா மாகாணம் | பதுளை | 22 |
| | மொனறாகலை | 23 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

10-41

---

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு "ஆ" மற்றும் வகுப்பு II பிரிவு "அ" வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2013

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்படி பரீட்சைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2014, சனவரி மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) இச்சட்டதிட்டங்களை மீறி நடக்கும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும். பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள், வர்த்தமானி அறிவித்தலின் தொடக்கத்தில் வேறாக அச்சிடப் பட்டுள்ளன.

3. இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தத்தம் விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதன்படி அரசாங்க சேவை அலுவலர்களாயின் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையின் அலுவலர்களாயின் அவர்கள் சேவையாற்றும் மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2013, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு தமது விண்ணப் பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணை யாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*4.* ***அடையாள அட்டைகள்.***- பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது ஆளடையாளத்தை பரீட்சார்த்திகள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

5. **விண்ணப்பப்படிவம்.**- (i) ஏ4 அளவிலான ஒரு தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இல. 1 முதல் 2 வரையிலான பந்திகளை முதலாம் பக்கத்திலும் ஏனையவற்றை மறுபக்கத்திலும் உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பங்களை தட்டச்சுசெய்து தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அவை பரீட்சார்த்திகளின் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் தாம் இப்பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப் பங்களும், தகவல்கள் முழுமையாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சார்த்தி தான் நிரப்பிய விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை பரீட்சார்த்தி சோதித்தறிதல் வேண்டும். அத்துடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் படிமப் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

(iii) முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதற்கு அடுத்த தடவைகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவ தாயின் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 200 உம் பரீட்சைக் கட்டணமாக செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவுவைக்கும்படி நாட்டின் ஏதாவதொரு அஞ்சல் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். இப்பற்றுச்சீட்டின் படிமப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்னிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீள செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப் படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சார்த்திகளுக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊடக மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக் காக பரீட்சார்த்திகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளி லும் விண்ணப்பித்தால் அம் மும்மொழிகளிலும் பரீட்சை நடாத்தப் படுவதுடன் பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற எல்லா வினாத்தாள் களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(v) **ஓர் அலுவலர் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே தடவையில் தோற்ற முடியாது.**

(vi) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II "ஆ" பிரிவில் உள்ள அலுவலர்கள் வகுப்பு II "ஆ" பிரிவிற்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

(vii) சேவையின் II "அ" பிரிவிலுள்ள அலுவலர்களும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஐந்து வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திய வகுப்பு II பிரிவு "ஆ" வின் அலுவலர்களும் வகுப்பு II பிரிவு "அ" வின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

6. விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள சகல அலுவலர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசிப் பிரதியுடன் அனுமதி அட்டை அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறானதொரு அனுமதி அட்டை இல்லாது பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அதுபற்றிய பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் கைவசமுள்ள விண்ணப்பத்தின் பிரதியொன்றையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய படிமப் பிரதியொன்றையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டையும், கொழும்பிற்கு வெளிப்பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்தின் பிரதியொன்றை தங்கள் கைவசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். மேலும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தற்கான சான்றாகக் கருதப்படக் கூடாது.

7. மேற்படி (06) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப் பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும் ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எனினும் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத் திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

9. **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்.**- இலக்கம் 03 இன்கீழ் மாகாண அரச சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும், அரசாங்க சேவை அலுவலர்களின் பெறுபேறுகளை அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*10.* ***பரீட்சைத் திட்டம்.***- *(1) வகுப்பு II பிரிவு "ஆ" ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் :*

*(1) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 01) — 100 புள்ளிகள்*

*(2) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 02) — 100 புள்ளிகள்*

*அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இல.01) - பாடத்திட்டம்*

*இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படும் :*

| | |
|---|---|
| *அத்தியாயம்* II | *சேவைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் நியமனம்* |
| *அத்தியாயம்* III | *இடமாற்றங்கள்* |
| *அத்தியாயம்* IV | *மாதச் சம்பளம், தற்காலிக நிலை, நிரந்தர மற்றும் ஓய்வூதியங்களுக்கான உரித்துடைமை வழங்குதல்* |
| *அத்தியாயம்* V | *விடுவிப்பு, முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல், சேவையை முடிவுறுத்தல்* |
| *அத்தியாயம்* VIII | *மேலதிக நேரப்படிகள், விடுமுறை நாட்களும், விடுமுறை நாட்களுக்கான சம்பளங்களும் படிகளும்* |
| *அத்தியாயம்* XII | *விடுமுறை* |
| *அத்தியாயம்* XIII | *புகையிரத ஆணைச்சீட்டுக்கள்* |
| *அத்தியாயம்* XIV | *நாட்டினுள்ளே கடமை நிமித்தமான பிரயாணங்கள்* |
| *அத்தியாயம்* XIX | *அரசாங்க வாசஸ்தலங்கள்* |
| *அத்தியாயம்* XLVII | *பொது நடத்தையும் ஒழுக்கமும்* |

*நிதி ஒழுங்குவிதிகள் (பாட இல. 02) - பாடத்திட்டம்*

*இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படும் :*

*(1) அத்தியாயம் I.- செலவின மற்றும் வருமான மதிப்பீடுகள், திரட்டு நிதி மற்றும் செலவுகளைத் திட்டமிடுதல், நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தல், வருடாந்த செலவு மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கும் வடிவம், புதிய பிரேரணைகள் செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் பொறுப்பு, செலவு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல் (நி. ஒ. 1-68 வரை)*

*(2) அத்தியாயம் III.- நிதி முகாமையும் வகைகூறலும், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள், அரசிறை கணக்கு அலுவலர்கள் கொடுப்பனவுக்காக அதிகாரமளித்தல், அங்கீகாரம் வழங்குதல், உறுதிப்படுத்தல் பணிகளை ஒப்படைத்தல் (நி. ஒ. 124-147 வரை)*

*(2) வகுப்பு II பிரிவு "அ" வைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும் :*

*(அ) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 03) — 100 புள்ளிகள்*

*(ஆ) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலயம்) (பாட இல. 04) — 100 புள்ளிகள்*

*அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இல. 03) - பாடத்திட்டம்*

*இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் :*

| | |
|---|---|
| *அத்தியாயம்* XV | *கல்வி, பயிற்சி அல்லது கடமை நிமித்தம் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்கள்* |
| *அத்தியாயம்* XVI | *விடுமுறை பிரயாணங்கள்* |
| *அத்தியாயம்* XXIII | *குறிப்பிட்ட வகை நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் அரசாங்க அலுவலர்கள் சம்பந்தமான விசேட சலுகைகளும் அதுபற்றிய நிபந்தனைகளும்* |
| *அத்தியாயம்* XXIV | *சம்பளக் கடன்களும் முற்பணங்களும்* |
| *அத்தியாயம்* XXV | *தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள்* |
| *அத்தியாயம்* XXVII | *கடிதத் தொடர்பு வழிமுறைகள்* |
| *அத்தியாயம்* XXVIII | *நிர்வாக நடைமுறைகளும் நியதிகளும்* |
| *அத்தியாயம்* XXX | *அரச அலுவலர்கள் மீதான அரசாங்கத்தின் அதிகாரங்கள்* |
| *அத்தியாயம்* XXXIII | *சட்ட ஆலோசனையும் சட்ட நடவடிக்கைகளும்* |
| *அத்தியாயம்* XLVII | *பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும்* |
| *அத்தியாயம்* XLVIII | *ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான விதிமுறைகள்* |

*அலுவலர்களின் செயலாற்றுகை, மற்றும் மதிப்பீடுகள் பற்றிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்புடையதாகும்.*

*நிதி ஒழுங்குவிதிகள் : பாட இலக்கம் 04 - பாடத்திட்டம்*

*இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படும் :*

*(1) அத்தியாயம் VI.- அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, முற்பணக் கணக்குகளும் வங்கிக் கணக்குகளும், உப படிவப் புத்தகங்கள், நிதி, முத்திரைகள் போன்றவை தொடர்பான தொகை மதிப்பீட்டுச் சபைகள், முற்பணங்கள், வங்கிக் கணக்குகள் (நி. ஒ. 315-396 வரை)*

(2) அத்தியாயம் XIII.- வழங்கல்கள், வேலைகள் மற்றும் சேவைகள் : பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்கள், வழங்கல்கள், பொருட்களின் பொறுப்பு மற்றும் சரிபிழை பார்த்தல், மேலதிக பொருட்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்கள் (நி. ஒ. 685 முதல் 775 வரை)

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப் படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதப்படக்கூடாது.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கு இடையில் யாதாயினும் உடன்பாடின்மைகள் காணப் படுமிடத்து சிங்கள மொழியிலான வாசகமே செல்லுபடியானதாக அமையும்.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2013.09.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு 'ஆ' மற்றும் வகுப்பு II பிரிவு 'அ' வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013**

**(Efficiency Bar Examination Prescribed for Officers in Segment "B" and Segment "A" of Class II of the Sri Lanka Technological Service - 2013**

(பிரிவு 'ஆ' மற்றும் 'அ' இற்காக ஒரே முறையில் விண்ணப்பிக்க முடியாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பரீட்சை :
II "ஆ" - 0
II "அ" - 1 ☐
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
(முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதா. : (SILVA, A.B)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :———.

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :———.
(சிங்களத்தில்/தமிழில்) :———.

(ஈ) அலுவலக முகவரி (ஆங்கிலத்தில்/தமிழில்) :———.
(பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

(உ) பால்: (ஆண்-0, பெண்-1) ☐
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

(ஊ) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(எ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஏ) தோற்றும் பாடம்/பாடங்கள் :
(வகுப்பு II "ஆ" பிரிவின் வகுப்பு II "அ" பிரிவின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்காக தோற்றும் பாடங்கள் (ஏற்புடையதாகாத சொற்களை வெட்டி விடவும்)

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| ——— | ☐ |
| ——— | ☐ |

2. நீங்கள் மாகாண அரசாங்க சேவையைச் சார்ந்தவரா ? அல்லது அரசாங்க சேவையைச் சார்ந்தவரா ? ☐
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

(அரசாங்க சேவை – 1, மேல் மாகாண அரசாங்க சேவை - 2, தென் மாகாண அரசாங்க சேவை - 3, மத்திய மாகாண அரசாங்க சேவை - 4, வடமேல் மாகாண அரசாங்க சேவை - 5, சப்பிரகமுவ மாகாண அரசாங்க சேவை - 6, ஊவா மாகாண அரசாங்க சேவை - 7, வடமத்திய மாகாண அரசாங்க சேவை - 8, வடக்கு மாகாண அரசாங்க சேவை - 9, கிழக்கு மாகாண அரசாங்க சேவை - 10)

3. (i) பிறந்த திகதி :
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2013.11.04 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. (i) பதவிப் பெயர் :———.

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பும் தரமும் ................ (II "அ"/II "ஆ" என்ற வகையில் உள்ளடக்க வேண்டும்.) :———.

(iii) 2013.11.04 ஆந் திகதிக்கு அத்தரத்தில் சேவைக்காலம் : ———.

5. நீங்கள் சார்ந்துள்ள திணைக்களம் :———.

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்) |
| --- |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும் மேலே குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவன் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் உறுதிமொழிகின்றேன்.

———,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :———.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக் களத்தில் அவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்றுள்ள அலுவலர் அல்லது தமது பகுதித் தலைவர் முன்னிலையில் விண்ணப்ப தாரர் தனது கையொப்பத்தை இடவேண்டும்.

### கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

எனது அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ......................... ........................... என்பவர் ................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட் டுள்ளதென்றும் அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

———,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

மேலே இல. 1 முதல் 5 வரையான பந்திகளில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும் அவரால் தரப்பட்டுள்ள மொழிமூலத்தில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.

திகதி :———.

10-139

## இலங்கை மதுவரித் திணைக்களம்

### வட மாகாணத்தில் சேவையாற்றும் முகமாக மதுவரி பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி பரிசோதகர் பதவி பொருட்டு இலங்கை ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இணங்க 297 மி. மீ. x 210 மி. மீ. (ஏ4) தாள்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.11.04 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 34, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "மதுவரி பரிசோதகர் பதவி பொருட்டான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள், அறிவித்தலுக்கேற்ப எல்லாவிதத்திலும் முழுமையாகவும் சரியாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத அல்லது உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதங்கள் தபாலில் தொலைந்தமை பற்றிய முறைப்பாடு கருத்திலெடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

1. **பதவியின் பொதுவான கடமை விபரம்**.- இயைபான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய கட்டளைகளின்கீழ் சட்டரீதியாக மது நியமப்படுத்தல், சட்ட விரோத மதுபோதைப் பொருள் தடுப்பு செயன்முறை பொருட்டு கனிட்ட அலுவலர்களை வழிநடாத்துதலும் மேற்பார்வையும் அத்துடன் குறித்த நடவடிக்கைகளில் தனிப்பட்ட ரீதியில் ஈடுபடுதல் அதாவது, ஏதேனும் அதிகாரப் பிரதேசமொன்றில் அல்லது விசேட பிரிவொன்றில் அல்லது மதுவரி நிலையமொன்றில் உரிய பணிகளை நிறைவேற்றுதல், மது குற்றங்களை சுற்றிவளைத்தல், தடுத்தல் நடவடிக்கைகளை தாமாக செயற்படுத்துதல் அத்துடன் குறித்த பணிகள் பொருட்டு கனிட்ட அலுவலர்களை வழிநடாத்துதல்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- மாதாந்தம் ரூ. 15,850- 7x180-2x240-8x320-17x375-ரூ. 26,525 (II படிநிலை) சம்பளம் இப்பதவிக்கு உரித்துடையதாகும். (அ. நி. சு. 6/2006 iv இன்படி (RS-2-2006V)

நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்களினுள் முதலாவது வினைத் திறன் தடைப் பரீட்சையிலும் நியமனத் திகதியிலிருந்து 6 வருடங்களினுள் இரண்டாவது வினைத்திறன் தடைப்பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

3. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் 2013.11.04 ஆந் திகதிக்கு 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது மதுவரித் திணைக்களத்தில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு ஏனைய தகைமைகள் இருப்பின், உச்ச வயதெல்லையை கருத்திலெடுக்காது வெளி அபேட்சகர்களாக விண்ணப்பிக்க முடியும்.

4. **கல்வி மற்றும் பிற தகைமைகள்**.- (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும் ;

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களின் பொருட்டு திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) பாதணிகள் இன்றி ஆகக்குறைந்த உயரம் 167.6 செ. மீ. (5 அடி 6 அங்குலம்) இருத்தல் வேண்டும் என்பதுடன், மார்பின் அளவு மூச்சு உள்வாங்காமல் 83.8 செ. மீ. (33 அங்குலம்) இருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(v) நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியத்தை கொண்டிருத்தல் வேண்டும் ;

(vi) மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகை கண்ணாடிவில்லை (கென்டாக்ட் லென்சஸ்) அணியாது பொருள்களை இனங்காணும் பார்வை அடங்கலாக குறைந்தபட்சம் 6/6 மற்றும் 6/12 ஆன கண் பார்வை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(vii) விளையாட்டுத் திறமை மற்றும் வெளிச் செயற்பாடுகளின்பால் முன்னுரிமை அளிக்கப்படும்.

**கவனிக்கவும்**.- *உடல் ரீதியான தகைமைகள் விண்ணப்பதாரர் களுக்கு உள்ளனவா என நியமனம் வழங்குவதற்கு முன்னர் பரிசீலனை செய்யப்படும்.

5. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் தனிநபர் ஆற்றல் மீது உரிய கவனம் செலுத்தும் நேர்முகப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு பட்டதாரிகள் மத்தியிலிருந்து ஆட்சேர்க்கப்படும். தகைமை பெற்றிருப்பது நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமாக அல்லது அதற்கு குறைந்த அபேட்சகர் எண்ணிக்கை மாத்திரம் என உறுதிப்படுத்தப்படின், எழுத்துப் பரீட்சையை நடாத்தாமல் அவர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படலாம்.

*எழுத்துப் போட்டிப் பரீட்சை பற்றிய விபரங்கள்*.- பொது வினாத்தாள் (நேரம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்.

விண்ணப்பதாரரின் நுண்ணறிவு, தர்க்கிக்கும், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பனவற்றை பரீட்சித்துப் பார்த்தல் இதன் மூலம் எதிர்பார்க் கப்படுகிறது. (கணித/சித்திர சிக்கல்கள், ஒத்த/எதிர்கருத்துள்ள சொல் எழுதுதல், சொற்றொடர்/வாக்கியம் அமைத்தல், வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற வினாக்களும் இதனுள் அடங்கும்.) இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

*கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை*.- நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப எழுத்துப் பரீட்சையில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சை பொருட்டு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்குவதற்காக தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். அபேட்சகர்கள் தமிழ் மொழியில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றுதல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கீழே குறிப்பிட்ட தகைமைகள் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படும் :-

(i) *விளையாட்டுத் திறமை*.- வேறுபட்ட விளையாட்டுக்கள் தொடர்பாக தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் பாடசாலை போட்டிகளில் காட்டியுள்ள சாதனைகள் பொருட்டு ;

(ii) *விசேட பயிற்சி*.- (பயிலிளவல்/சுயேச்சைச் சேவை/ தற்பாதுகாப்புக் கலைகள் அல்லது நுட்பப் பயிற்சி) ;

(iii) பிற வெளிச் செயற்பாடுகள்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணப்பதாரர்கள் ரூ. 300 பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். குறித்த தொகையை மதுவரி ஆணையாளர் நாயகத்தின் இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையில் 0007041628 ஆம் இலக்கம் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கக் கூடியதாக ஏதேனும் வங்கிக் கிளையிலிருந்து பெற்ற வங்கி ஆணை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். வங்கி ஆணையின் ஒளிப் படப்பிரதி ஒன்றை விண்ணப்பதாரர் தம்வசம் வைத்துக்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இத்தொகை மீள செலுத்தப்பட மாட்டாது.

7. **பயிற்சிக் காலம்**.- தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களுக்கு 3 மாத பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சிக் கால எல்லை முடிவில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையாதவர்களின் பயிற்சி முடிவுறுத்தப்படும். குறித்த பரீட்சையில் சித்தியடையாமையானது இயைபான பயிலுநரின் பாட எல்லையை விஞ்சியுள்ள விடயங்கள் காரணமாகவென உறுதிப்படுத்தப்படின் பயிற்சிக் காலம் மூன்று (3) மாதங்களினால் நீடிக்கப்பட்டு மீண்டும் பரீட்சையொன்றில் தோற்றுவதற்கு அவருக்கு இடமளிக்கலாம். பயிற்சிக் காலத்தின்போது ரூ. 3,000 மாதாந்தம் திரட்டுக் கொடுப்பனவொன்று பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும்.

8. **தகுதிகாண் காலம்**.- வெற்றிகரமாக பயிற்சியை முடித்துக் கொள்ளும் அபேட்சகர்கள் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு மதுவரி பரிசோதகர்களாக நியமிக்கப்படுவார்கள். தகுதிகாண் காலம் முடிவில் அவர்களால் சித்தியடைய வேண்டும் என விதித்துரைக்கப்படுகின்ற திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடையின் மதுவரி பரிசோதகர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள். பரீட்சையில் சித்தியடையாமையானது அலுவலரின் பாட எல்லையை விஞ்சியுள்ள விடயங்கள் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது என உறுதிப்படுத்தப் படின் அவரின் நடத்தை, வேலை மற்றும் வருகை எல்லா விதத்திலும் திருப்திப்படின் குறித்த பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு அவரது தகுதிகாண் காலம் ஆகக்கூடிய பட்சம் இரண்டு வருடங்கள் வரை மாத்திரம் நீடிக்கப்பட முடியும்.

9. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும் ;

(ii) நாட்டின் எப்பிரதேசத்திலேனும் சேவையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட முடியும் ;

(iii) நியமனத் திகதியிலிருந்து தொடர்ந்து 10 வருடங்கள் வட மாகாணத்தில் சேவையாற்றுதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (i) அரச கரும மொழிகள் சட்டம் அத்துடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் அமுல்படுத்தப் படுகின்ற சகல ஒழுங்குவிதிகள், சட்டங்கள் என்பனவற்றுக்கிணங்க செயல்படுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

டி. ஜீ. எம். வீ. ஹபுஆரச்சி,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

இலங்கை மதுவரித் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மதுவரித் திணைக்களம்**

மதுவரி பரிசோதகர் பதவி

1. (i) முழுப்பெயர் (தாய் மொழியில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. (i) நிரந்தர வதிவிட முகவரி :----.
   (ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.
   (iii) கிராம அலுவலர் பிரிவு :----.
   (iv) பொலிஸ் நிலையம் :----.
   (v) அருகிலுள்ள மதுவரி நிலையம் :----.
   (vi) அஞ்சல் முகவரி :----.
   (பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்காக)

3. பிறந்த திகதி :----.

   2013.11.04 ஆந் திகதியன்று வயது :-
   வருடங்கள் ------ மாதங்கள் ------ நாட்கள் ------

4. இலங்கைப் பிரசையா என்பது பற்றி (பரம்பரையாகவா, பதிவின் மூலமா என்பது பற்றி குறிப்பிடவும்) :----.
5. இனம் :----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :----.
8. கல்வித் தகைமைகள் :

   (i)

| பட்டத்தின் பெயரும் வருடமும் | பல்கலைக் கழகம் | பாடங்கள் | சித்தியடைந்த வகுப்பு |
|---|---|---|---|
| | | | |

   (ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையின் சித்திகள் :

| கணிதம்/ஆங்கில சான்றிதழ் இலக்கமும் வருடமும் | சித்தியடைந்த வருடம் |
|---|---|
| | |

9. தற்போது தொழில் புரிவதாயின், அதுபற்றிய விபரங்கள் :----.

10. விளையாட்டு சான்றிதழ் மற்றும் வெளிச் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் :----.

11. பிற விசேட பயிற்சி பற்றிய விபரங்கள்/சுயேச்சை இராணுவ சேவை இருப்பின் அதன் விபரங்கள் :----.

12. (i) உயரம் :................................ செ. மீ.
   (................ அடி ................ அங்குலம்)

   (ii) மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்) ........................ செ. மீ. (.......................... அங்குலம்)

13. குற்றவியல் தவறொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அந்த தவறும் பெற்ற தண்டனையும் பற்றிய விபரங்கள் :----.

14. பணம் செலுத்திய வங்கியின் பெயர் :----.
   பற்றுச்சீட்டு இலக்கம் :----.

   | பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும். |
   |---|

15. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது தவறானது என தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்படின், இந்த பதவி பொருட்டு நான் தகைமை இழப்புக்கு ஆளாவேன் எனவும், அத்தகைய விடயங்கள் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு இன்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10-149/1

---

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

வட மாகாணத்தில் சேவையாற்றும் முகமாக மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

மதுவரித் திணைக்களத்தின் மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவி பொருட்டு இலங்கை பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இணங்க 297 மி. மீ. x 210 மி. மீ. (ஏ4) தாள்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.11.04 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 34, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள், அறிவித்தலுக்கேற்ப எல்லாவிதத்திலும் முழுமையாகவும் சரியாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத அல்லது உரிய திகதியில் கிடைக்கப்பெறாத விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் அல்லது அது தொடர்பான கடிதங்கள் தபாலில் தொலைந்தமை பற்றிய முறைப்பாடு கருத்திலெடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

1. **பதவியின் பொதுவான கடமை விபரம்**.- குறித்தொதுக்கப்படுகின்ற அதிகாரப் பிரதேசத்தில் வெளிக்கள கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் மதுவரித் திணைக்களத்தின் அதிகார

வரம்பிற்குள் வரும் மதுவரிக் கட்டளைச் சட்டம், நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம், 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் மது குற்றங்களுக்கு ஏற்புடைய தகவல்களைக் கண்டுபிடித்து அறிக்கையிடல், அத்தகைய சுற்றிவளைப்புகளுக்கு உதவுதல், உரிய நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உதவுதல், இதற்கு மேலதிகமாக அலுவலகத்தின் ஒதுக்குக் கடமை அடங்கலாக மது குற்றங்கள்/தொழில்நுட்ப அறிக்கைகள், பதிவேடுகளை நாளதுவரைப்படுத்தி பேணுதல்.

*2.* **சம்பள அளவுத்திட்டம்**.- மாதாந்தம் ரூ. 14,280 - 7 x 145 - 10 x 180 - 17 x 240 - ரூ. 21,175 சம்பளம் இப்பதவிக்கு உரித்துடையதாகும். (அ. நி. சு. 6/2006 iv இன்படி (RS-1-2006A)

(நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்களினுள் வினைத்திறன் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

*3.* **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் 2013.11.04 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது மதுவரித் திணைக்களத்தில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு ஏனைய தகைமைகள் இருப்பின், உச்ச வயதெல்லையை கருத்திலெடுக்காது வெளி அபேட்சகர்களாக விண்ணப்பிக்க முடியும்.

*4.* **கல்வி மற்றும் பிற தகைமைகள்**.- (i) தமிழ்/சிங்கள மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஆங்கில மொழியும் அடங்கலாக ஆறு பாடங்களில் ஒரே தடவையில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

(ii) ஆண் மதுவரி காவலாளர் பொருட்டு பாதணிகள் இன்றி ஆகக்குறைந்த உயரம் 5 அடி 6 அங்குலம் இருத்தல் வேண்டும். மார்பின் அளவு மூச்சு உள்வாங்காமல் 33 அங்குலம் இருத்தல் வேண்டும். பெண் மதுவரி காவலாளர் பொருட்டு உயரம் 5 அடி 2 அங்குலம் இருத்தல் வேண்டும் ;

(iii) மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகை கண்ணாடி வில்லை (கென்டாக்ட் லென்சஸ்) அணியாது பொருள்களை இனங்காணும் பார்வை அடங்கலாக குறைந்தபட்சம் 6/6 மற்றும் 6/12 ஆன கண் பார்வை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். பெண் விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். ஆட்சேர்க்கப்படும் பெண் காவலாளர் தகுதிகாண் காலத்தைப் பூர்த்திசெய்து பதவியில் உறுதிப்படுத்தப்படும் வரையில் திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது ;

(v) நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியத்தை கொண்டிருத்தல் வேண்டும் ;

(vi) விளையாட்டுத் திறமை மற்றும் வெளி செயற்பாடுகள்பால் முன்னுரிமை அளிக்கப்படும்.

**கவனிக்கவும்**.- *உடல் ரீதியான தகைமைகள் விண்ணப்பதாரர்களுக்கு உள்ளனவா என நியமனம் வழங்குவதற்கு முன்னர் பரிசீலனை செய்யப்படும்.

*5.* **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- தமிழ் மொழியில் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் தனிநபர் ஆற்றல் மீது உரிய கவனம் செலுத்தும் நேர்முகப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்க்கப்படும். தகைமை பெற்றிருப்பது நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமாக அல்லது அதற்கு குறைந்த அபேட்சகர் எண்ணிக்கை மாத்திரம் என உறுதிப்படுத்தப்படின், எழுத்துப் பரீட்சையை நடாத்தாமல் அவர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படலாம்.

எழுத்துப் போட்டிப் பரீட்சை பற்றிய விபரங்கள் :

பொது உளச்சார்பு (நேரம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.
பொது அறிவு (நேரம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.

*கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை*.- நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப எழுத்துப் பரீட்சையில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை பொருட்டு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள், எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்குவதற்காக தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் தமிழ் மொழியில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றுதல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கீழே குறிப்பிட்ட தகைமைகள் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படும் :

(i) விளையாட்டுத் திறமை.- வேறுபட்ட விளையாட்டுக்கள் தொடர்பாக தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் பாடசாலை போட்டிகளில் காட்டியுள்ள சாதனைகள் பொருட்டு ;

(ii) விசேடப் பயிற்சி.- (பயிலிளவல்/சுயேச்சைச் சேவை/ தற்பாதுகாப்பு கலைகள் அல்லது நுட்பப் பயிற்சி) ;

(iii) பிற வெளிச் செயற்பாடுகள்.

*6.* **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணப்பதாரர்கள் ரூ. 300 பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். குறித்த தொகையை மதுவரி ஆணையாளர் நாயகத்தின் இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையில் 0007041628 ஆம் இலக்கம் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கக் கூடியதாக ஏதேனும் வங்கிக் கிளையிலிருந்து பெற்ற வங்கி ஆணை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். வங்கி ஆணையின் ஒளிப் படப்பிரதி ஒன்றை விண்ணப்பதாரர் தம்வசம் வைத்துக்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இத்தொகை மீள செலுத்தப்பட மாட்டாது.

*7.* **பயிற்சிக் காலம்**.- தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களுக்கு 3 மாத பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சிக் கால எல்லை முடிவில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையாதவர்களின் பயிற்சி முடிவுறுத்தப்படும். குறித்த பரீட்சையில் சித்தியடையாமையானது இயைபான பயிலுனரின் பாட எல்லையை விஞ்சியுள்ள விடயங்கள் காரணமாகவென உறுதிப்படுத்தப்படின் பயிற்சிக் காலம் மூன்று (3) மாதங்களால் நீடிக்கப்பட்டு மீண்டும் பரீட்சையொன்றில் தோற்றுவதற்கு அவருக்கு இடமளிக்கப்படலாம். பயிற்சிக் காலத்தின்போது ரூ. 3,000 மாதாந்த திரட்டுக் கொடுப்பனவொன்று பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும்.

*8.* **தகுதிகாண் காலம்**.- வெற்றிகரமாக பயிற்சியை முடித்துக் கொள்ளும் விண்ணப்பதாரிகள் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு மதுவரி காவலாளர்களாக நியமிக்கப்படுவார்கள். தகுதிகாண் காலம் முடிவில் அவர்களால் சித்தியடைய வேண்டும் என விதித்துரைக்கப்படுகின்ற திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடையின் மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள். பரீட்சையில் சித்தியடையாமையானது அலுவலரின் பாட எல்லையை விஞ்சியுள்ள விடயங்கள் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது என உறுதிப்படுத்தப்படின் அவரின் நடத்தை, வேலை மற்றும் வருகை எல்லா விதத்திலும் திருப்திப்படின் குறித்த பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு அவரது தகுதிகாண் காலம் ஆகக்கூடிய பட்சம் இரண்டு வருடங்கள் வரை மாத்திரம் நீடிக்கப்பட முடியும்.

9. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.**- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும் ;

(ii) நாட்டின் எப்பிரதேசத்திலேனும் சேவையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட முடியும் ;

10. **சேவை நிபந்தனைகள்.**- (i) அரச கரும மொழிகள் சட்டம் அத்துடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் அமுல்படுத்தப் படுகின்ற சகல ஒழுங்குவிதிகள், சட்டங்கள் என்பனவற்றுக்கிணங்க செயல்படுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

(iii) நியமனத் திகதியிலிருந்து தொடர்ந்து 10 வருடங்கள் வட மாகாணத்தில் சேவையாற்றுதல் வேண்டும்.

டி. ஜீ. எம். வீ. ஹபுஆரச்சி,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

இலங்கை மதுவரித் திணைக்களம்,
2013.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மதுவரித் திணைக்களத்தின் மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவி**

1. (i) முழுப்பெயர் (தாய் மொழியில்) :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. (i) நிரந்தர வதிவிட முகவரி :----.
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(iii) கிராம அலுவலர் பிரிவு :----.
(iv) பொலிஸ் நிலையம் :----.
(v) அருகிலுள்ள மதுவரி நிலையம் :----.
(vi) அஞ்சல் முகவரி :----.
(பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்காக)

3. பிறந்த திகதி :----.

2013.11.04 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் ------ மாதங்கள் ------ நாட்கள் ------

4. இலங்கைப் பிரசையா என்பது பற்றி (பரம்பரையாகவா, பதிவின் மூலமா என்பது பற்றி குறிப்பிடவும்) :----.
5. இனம் :----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :----.
8. கல்வித் தகைமைகள் :

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையின் சித்திகள் :
வருடம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

வருடம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. பாடசாலையிலிருந்து விலகிய பின் செய்த தொழில்/பின்பற்றிய பயிற்சிநெறிகள் :

| தொழில் அல்லது பயிற்சி நெறியின் பெயர் | காலம் இருந்து வரை | நிறுவனம் | தொழில் எனின் விலகிய மைக்கான காரணம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

10. விளையாட்டு சான்றிதழ் மற்றும் வெளிச் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் :----.

11. பிற விசேட பயிற்சி பற்றிய விபரங்கள்/சுயேச்சை இராணுவ சேவை இருப்பின் அதன் விபரங்கள் :----.

12. (i) உயரம் :................................ செ. மீ.
(................ அடி ................ அங்குலம்)

(ii) மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்) .................. செ.மீ.
(................ அங்குலம்)

13. குற்றவியல் தவறொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அந்த தவறும் பெற்ற தண்டனையும் பற்றிய விபரங்கள் :----.

14. பணம் செலுத்திய வங்கியின் பெயர் :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

15. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது தவறானது என தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்படின், இந்த பதவி பொருட்டு நான் தகைமை இழப்புக்கு ஆளாவேன் எனவும், அத்தகைய விடயங்கள் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப் படின் நட்டஈடு இன்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10-149/2

**விவசாய அமைச்சு**

விவசாய திணைக்களம்

*விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவை பதவிகளில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013*

விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் விவசாயப் போதனாசிரியர், ஆராய்ச்சி உதவியாளர், மண் அளவையாளர் ஆகிய பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2013.10.28 ஆகும். அன்றைய தினம் விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

3. பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படை கல்வித் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும் :

| | | 3.1 கல்வித் தகைமைகள் | | 3.2 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | க. பொ. த. (சா. த.) | க. பொ. த. (உ. த.) | |
| 1 | விவசாயப் போதனா சிரியர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல். | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் உட்பட மொத்தம் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | (i) குண்டசாலை, அங்குணகொல பெலஸ்ஸ, பெல்வெஹர, பிபிலை, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அநுராதபுரம், கரபிஞ்சா ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் விவசாயத்திலான இரு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது (ii) ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது (iii) அக்வைனாஸ் நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் (iv) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் (v) மேற்கூறிய தகைமைகளுக்கு சமமானதென இலங்கை தொழில்நுட்பவியல் சேவைகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தகைமைகளை பெற்றிருத்தல். |
| 2 | ஆராய்ச்சி உதவியாளர் | | | |
| 3 | மண் அளவையாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் | (i) குண்டசாலை, அங்குணகொல பெலஸ்ஸ, பெல்வெஹர, பிபிலை, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அநுராதபுரம், கரபிஞ்சா ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் விவசாயத்திலான இரு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். |

| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | க. பொ. த. (சா. த.) | க. பொ. த. (உ. த.) | |
|---|---|---|---|---|
| | | இரண்டிற்கு மேற் படாத அமர்வுகளில் சித்திபெற்றிருத்தல். | உட்பட மொத்தம் மூன்று விஞ்ஞானப் பாடங் களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | அல்லது<br>(ii) ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயத்திலான இரு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(iii) அக்வைனாஸ் நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயத்தி லான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>(iv) நெதர்லாந்தின் International Institution for Ariel Survey Earth Science (ITC) நிறுவனத்தின் மண் அளவை யிடற் பணிகள் தொடர்பாக பயிற்சி நெறியொன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி டிப்ளோமா சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் அல்லது மண் அளவையிடற் பணிகள் தொடர் பாக அதற்குச் சமமான அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றால் டிப்ளோமா சான்றிதழ் பெற்றி ருத்தல்.<br>(v) மேற்கூறிய தகைமைகளுக்கு சமமானதென இலங்கை தொழில்நுட்பவியல் சேவை கள் சபையால் ஏற்றுக்கொள் ளப்படும் வேறு தகைமைகளை பெற்றிருத்தல். |

**குறிப்பு**.- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து டிப்ளோமாவினைப் பெற்றுக்கொண்டவர்கள் அப்பல்கலைக்கழகத்திலே டிப்ளோமாவுக்குரிய அடிப்படைப் பாடநெறியில் சித்திபெற்றிருக்கும் பட்சத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட முடியும்.

**கவனிக்க**.- விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3.3 **ஏனைய தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளமை அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் ;

இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்காக பொருத்தமான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.

**4**. திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களில் குறித்த வெற்றிட அளவொன்றை அல்லது வெற்றிடங்கள் யாவற்றையும் நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

சம்பளமும் தகுதிகாண் தடைதாண்டற் பரீட்சையும்.- சம்பள குறியீட்டு இலக்கம் : எம். என். 03/2006ஏ

சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885 ஆகும்.

III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற 3 வருடங்களுக்குள் முதலாவது தகுதிகாண் தடைதாண்டிப் பரீட்சையிலும், II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 3 வருடங்களுக்குள் இரண்டாவது தகுதிகாண் தடைதாண்டிப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி ஒன்றில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் தகுதிகாண் காலத்தினுள் விதிக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். நியமனத் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியினை பொ. நி. சு. 07/2007 இன் I (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு அரச கரும மொழிகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் இரண்டாம் தர திறன் மட்ட மொழிக் கற்கைநெறிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இவ்வரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாமை அல்லது தகுதிகாண் தடைதாண்டற் பரீட்சையில் குறித்த காலப்பகுதிக்குள் சித்தியடையாமை எதிர்கால சம்பள ஏற்றம் தள்ளிப்போடப்படுவதற்குக் காரணமாக அமையலாம்.

5. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனை**.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதை, தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(ii) குறித்தொதுக்கப்படும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கடமைப்பட்டிருப்பதோடு கண்டி (ஹசலக), அம்பாறை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை, மொனராகலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சேவை நிலையங்களிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள சேவை நிலையங்களிலும் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(iii) 1426/34 ஆம் இலக்க 2006.01.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டு தற்போது செயல்வலுவிலுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பத்தை ஏ4 (21செ. மீ. x 29 செ. மீ.) அளவுடைய தாளொன்றை உபயோகித்து அதன் இரு பக்கத்திலும் அமையுமாறு இலக்கம் 1 முதல் 4 வரை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 5 இல் இருந்து 7 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவை 3 ஆம் பக்கத்திலும் அடங்குதல் வேண்டும். உரிய தகவல்கள் தமது சொந்தக் கையெழுத்தினால் குறிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்பொழுது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்களும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவுறுத்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் (Photostate) பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவுறுத்தல்களில் குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்துள்ளனவா என விண்ணப்பதாரி பரிசீலனை செய்து பார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ) மேற்குறித்த 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குறித்த 3 பதவிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவை அனைத்தையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2013.10.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(உ) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2013" எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பதாரி ஒருவருக்கு ஒரு பதவிக்கு அல்லது சகல பதவிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். இதற்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 750 ஆகும். அப்பணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003.02.13 ஆம் வருமானத் தலைப்பின்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்ட செயலகத்தில் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் எதிர்காலத்தில் பயனளிக்கும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாது என்பதுடன் காசுக் கட்டளை, முத்திரை என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(எ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(ஏ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது அரச சேவையில் பதவி நிலை அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஐ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) அனுமதி அட்டை விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார். அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாகக் கருதப்படலாகாது.

(ஆ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே அதுபற்றிய அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதியுடன் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டையும் அத்துடன் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உமது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியே இருப்பவர்கள் மேற்கூறிய விபரங்களுடன் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தமது தொலைநகல் (Fax) இலக்கத்தையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் (Fax) மூலம் அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்பட மாட்டாது.

(ஈ) ஆளடையாளம்.- பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(உ) பாடப்பரப்பு :

(i) விவேகப் பரீட்சை.- (1 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள். பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான பல்தேர்வு சுருக்க விடை கோரும் 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) தொழில்நுட்பவியல்சார் வினாத்தாள் (2 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள் :

1 ஆம் பகுதி பல்தேர்வு சுருக்க விடை கோரும் 50 வினாக்கள் அடங்கிய வினோத வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

2 ஆம் பகுதி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான 10 வினாக்களடங்கிய சகல வினாக்களுக்கும் விடையளிக்கவேண்டிய வினாத்தாளாகும். (காலம் : 1 மணித்தியாலம்)

| பதவி | தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு |
|---|---|
| (1) விவசாயப் போதனாசிரியர்<br>(2) ஆராய்ச்சி உதவியாளர் | இலங்கை பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு இலங்கை காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு, மண், பயிர் போஷணை நெல் உற்பத்தி ஏனைய வயற் பயிர்கள் உற்பத்தி, காய்கறி உற்பத்தி, பழ உற்பத்தி, பயிர் பாதுகாப்பு, மண் பாதுகாப்பின் முக்கியத்துவமும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகளும் நீர்ப்பாசன முறைகளும் நீர் முகாமையும் பண்ணை இயந்திர மயமாக்கல் தேனீ வளர்ப்பு, மலர் வளர்ப்பு, தரை அலங்காரம் பாதுகாக்கப்பட்ட பயிர்ச் செய்கைகள் கால்நடை வளர்ப்பு, விவசாய விரிவாக்கம், தாவர தடுப்புக்காப்பு தாவர பாதுகாப்பும் அதன் முக்கியத்துவமும், உயிரியல் தொழில்நுட்பம், விதை உற்பத்தி, இழைய வளர்ப்பு ஆகிய விடயங்களைக் கொண்டு வினாப்பத்திரத்திரத்திலேயே விடையளிக்க வேண்டிய வினாப்பத்திரம். |
| (3) மண் அளவையாளர் | இலங்கையின் மண் வகைகள் அவற்றின் பரம்பல், மண் உருவாவதில் தாக்கம் செலுத்தும் காரணிகள், மண் வெட்டுமுக இனங்காணல், வரைபட அறிவு, இலங்கையில் தற்போதுள்ள காணிப் பயன்பாட்டு போக்கு, காடழிப்பின் தாக்கம், அதன் சூழல் பாதிப்புகள் உரப் பாவனை, பயிர் வகைப்படுத்தல், மண் நீர் பாதுகாப்பு முறைகள் இலங்கையின் காலநிலை வலயங்கள். |

(ஊ) மொழி மூலம்.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(எ) வர்த்தமானி அறிவித்தலின் தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி பரீட்சைக் கட்டணம் செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர் அனைவருக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதாவது விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதப்பட மாட்டாது. கீழே (உ) இல் குறிப்பிடப்பட்ட உரிய 3 பதவிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாக இருந்தால் அவை அனைத்தையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பிவைத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்ளும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கும் ஆளாக நேரிடலாம்.

(ஏ) பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும்.- இப்பரீட்சை 2014, சனவரி மாதம் கொழும்பிலும் கண்டியிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து கொழும்பில் மாத்திரம் பரீட்சையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும். (விண்ணப்பித்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| பரீட்சை நிலையம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| கண்டி | 2 |

8. **ஆட்சேர்ப்பு முறை**.- (i) மேற்கூறிய பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40% அல்லது அதற்கு அதிகமாக பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளை தெரிவுசெய்து அப்புள்ளிகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியல் ஊடாக தெரிவுசெய்யப்படுவர்.

(ii) விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் இப்பரீட்சையின் புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரியின் தகைமைகளைப் பரீட்சித்து தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மாத்திரம் வெற்றிடத்துக்காக தேர்வுசெய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

(iii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

(iv) தகைமைகள் பூரணப்படுத்தப்படவில்லை என நேர்முகப் பரீட்சையின்போது தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

(v) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்படாமலேயே பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகப் பரீட்சைக்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவரது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(vi) போலியான தகவல்கள், திரிபுபடுத்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்து நியமனத்தைப் பெற்றாலும் அதுபற்றி தெரியவந்தவுடன் அவரது நியமனம் செல்லுபடியற்றதாக்கப்படுவதோடு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(vii) பெறுபேறுகளை வெளியிடல்.- ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேல் பெற்று சித்தியடையும் விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியலொன்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதியுடன் நேர்முகப் பரீட்சைக்காக வழங்கப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரி இறுதி முடிவெடுப்பார். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட பொதுப் பரீட்சை சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்படுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

10. மும்மொழிகளிலுமான இவ்வறிவித்தலில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

ஆர். ஆர். ஏ. விஜேகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
10.09.2013.

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைப் பதவிகளில் III ஆம் வகுப்பில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

Application for Open Competitive Examination for Recruitment to vacancies the Grade III of the Sri Lanka Technological Service in the Department of Agriculture

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்ற உள்ள பரீட்சை நிலையம் :
கொழும்பு - 1
கண்டி - 2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி/பதவிகள் (முன்னுரிமைப் பிரகாரம் விண்ணப்பிக்கும் பதவிகளை தொடராக குறிப்பிடுக.)

| பதவி | பதவியின் இலக்கம் |
|---|---|
| விவசாயப் போதனாசிரியர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 02 |
| மண் அளவையாளர் | 03 |

| விண்ணப்பிக்கும் பதவி | பதவியின் இலக்கம் |
|---|---|
| 01 | |
| 02 | |
| 03 | |

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்) :----.
உ-ம் : SILVA A.B.

1.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

1.4 தொலைபேசி இலக்கம் :----.

2. நிரந்தர முகவரி :-

2.1 ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :----.

2.2 சிங்களத்தில்/தமிழில் :----.

2.3 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.4 வதியும் மாவட்டம் :----.

2.5 பிரதேச செயலகப் பிரிவு :----.

3. பால் :

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

4. 4.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.3 விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :

விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

5. கல்வித் தகைமைகள் (மொழி மூலத்துடன்) :

(அ) கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சா. த.) பரீட்சை :

முதலாம் அமர்வு

(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை எண் :----.
(iii) மொழிமூலம் :----.
(iv) பரீட்சை முடிவுகள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

இரண்டாம் அமர்வு

(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை எண் :----.
(iii) மொழிமூலம் :----.
(iv) பரீட்சை முடிவுகள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ. த.) பரீட்சை :

(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை எண் :----.
(iii) மொழிமூலம் :----.
(iv) பரீட்சை முடிவுகள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

6. தொழிற் தகைமைகள் :

| டிப்ளோமா | டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் | சித்தியடைந்த வருடம் | மொழி மூலம் | பரீட்சை எண் | டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலகம்/மாவட்ட செயலக அலுவலகம் :

7.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :----.
7.2 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
7.3 செலுத்திய தொகை :----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும். |

(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளவும்.)

8. இப்பரீட்சை நிபந்தனைகள் அனைத்தையும் பேணி நடக்க இணங்குகிறேன்.

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.**- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன் அறியநேர்ந்தால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் செய்யப்பட்டதன்பின் அறியநேர்ந்தால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை பேணி நடப்பதாகவும் இணங்குகிறேன். அத்துடன் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவேன் எனவும், அவ்வாறே நான் விண்ணப்பித்த பதவிகளுக்காக ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பி வைப்பதாகவும் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

*10.* விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................................... எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் ......................................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்.)
திகதி :----.

10.1 ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் இணைந்திருப்பவர்களுக்காக (தேவையற்ற சொற்களை கீறிவிடவும்.) :

**திணைக்கள தலைவரின் சான்றிதழ் :**

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்காக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உண்டு/இல்லை எனவும், அவர் இப்பரீட்சைக்கு தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது/பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அத்துடன் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவிப்பெயரும்.

திகதி :----.

*10-37*

---

திருத்தம்

**வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் தொழில்நுட்பம் சாராத பாகம் 2 இற்கான வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலர் (Wildlife Guard) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின், தொழில்நுட்பம் சாராத பாகம் 2 இற்கான வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலர் (Wildlife Guard) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் விண்ணப்பம் கோரப்பட்ட முடிவுத் திகதி 2013.10.22 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

எச். டி. ரத்நாயக்க,
வனஜீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம்.

*10-61*

---

**அரச முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை – 2012 (2013)**

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் தகவுத்திறன் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2014, சனவரி மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பரீட்சைக்குத் தோற்றும் மொழியை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்க மாட்டாது. பரீட்சையை நடத்துதல் மற்றும் பரீட்சை முடிவுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாகும்.

2. அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்துவதற்கான இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நகரம் | | நகர இலக்கம் |
|---|---|---|
| கொழும்பு | - | 01 |
| கண்டி | - | 05 |
| காலி | - | 07 |
| மாத்தறை | - | 08 |
| யாழ்ப்பாணம் | - | 10 |
| மன்னார் | - | 11 |
| முல்லைத்தீவு | - | 12 |
| திருகோணமலை | - | 14 |
| மட்டக்களப்பு | - | 15 |
| குருநாகல் | - | 18 |

| நகரம் | | நகர இலக்கம் |
|---|---|---|
| அநுராதபுரம் | - | 19 |
| பதுளை | - | 21 |
| இரத்தினபுரி | - | 24 |
| கிளிநொச்சி | - | 25 |

மேற்படி ஏதேனுமொரு நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அந்நிலையம் இரத்துச் செய்யப்படுவதுடன் அப் பரீட்சார்த்திகள் அடுத்துள்ள நிலையத்துக்கு மாற்றப்படுவர். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாக கருத்தில் கொள்ளுதல் ஆகாது.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்கு விதிகளை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவர்.

(iii) பரீட்க்கு விண்ணப்பிக்கும்போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி, சேவை, நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன், பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.

4. **தகைமைகள்**.- சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களும் 2013, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களும் 04 வருட முனைப்பான அத்துடன் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளவர்களுமான அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

**குறிப்பு**.- தரமுயர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி மற்றும் 05 வருட முனைப்பான அத்துடன் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்த திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னராக அமையும் திகதி, பரீட்சையில் சித்தியடைகின்ற பரீட்சார்த்தியொருவர் சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்துவதற்கு தகைமையடைந்த திகதியாக கருதப்படும்.

5. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சைக்காக உள்ள பாடமும் அந்தந்த பாடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. சகல விடைத்தாள்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். வாசிக்க முடியாதவாறு எழுத் துக்களை எழுதியிருக்கும் பரீட்சார்த்திகள் தகைமையற்றவர்களாக்கப் படுவர்.

| பாடம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|
| தாபன நடைமுறை | 2 மணித்தியாலங்கள் | 100 |
| நிதி முறைகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| பொது வினாத்தாள் | 1 மணித்தியாலம் | 100 |

**தாபன நடைமுறை**.- அலுவலக முறைகள் தொடர்பான கோட் பாடுகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்துத் தொடர்புகள். கோப்பிடும் முறை மற்றும் படிவங்களைத் தயாரித்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கும் வண்ணம் அரச அலுவலகங்களில் நடைமுறைப்படும் அலுவலக முறைமைகள் தொடர்பான அறிவு மற்றும் அலுவலக நடவடிக்கைகளின் போது பெற்றுள்ள அனுபவங்களின் தேர்ச்சி என்பவற்றை பரீட்சித்தல் இவ்வினாத்தாளின் நோக்கமாகும். தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பான அறிவை பரிசோதிக்கும் ஒரு பகுதியும் இவ் வினாத்தாள் கொண்டிருக்கும். இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - பல்விருப்பு வினா 25 - 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் - 1 1/2 மணித்தியாலங்கள் - (75 புள்ளிகள்)

**நிதி முறைகள்**.- இவ்வினாத்தாள் பின்வருமாறு அமைந்திருக்கும்:-

(அ) பகுதி I - கூட்டல் மற்றும் கழித்தல் பயிற்சிகள் - 15 நிமிடங்கள் (25 புள்ளிகள்)

(ஆ) பகுதி II - அரசாங்க திணைக்களங்கள், அமைச்சு அலுவலகங்கள் என்பவற்றில் பிரயோகிக்கப்படும் நிதிக்கட்டுப்பாடு, நிதிகளின் பொறுப்பு, வருமானங்கள் மற்றும் கொடுப்பனவுகள், வரவு செலவு மதிப்பீடு, வழங்கல், வேலைகளும், சேவைகளும் ஆகிய விடயங்களில் பரீட் சார்த்திக்குள்ள அறிவு மற்றும் புரிந்து கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்கிய பகுதிக்கட்டமைப்பு முறையிலான 05 வினாக்களை கொண்டமைந்திருக்கும். (50 புள்ளிகள்)

(இ) பகுதி III - பொருட்களின் மீளாய்வும் களஞ்சியப்படுத்தலும் தொடர்பான அடிப்படை விடயங்கள் அடங்கிய பகுதிக் கட்டமைப்பு முறையிலான 03 வினாக்களை கொண்டமைந் திருக்கும் (25 புள்ளிகள்)

**குறிப்பு**.- கூட்டல் பயிற்சிகளுக்கு விடையளிக்கும்போது கணிப் பொறிகள் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

பொதுவினாத்தாள்.- ஏதேனும் ஒரு கூற்றினை அல்லது உரையாடலின் குறிப்பினை வாசித்து புரிந்து கொண்டு கடிதமொன்று மற்றும்/அல்லது அறிக்கையொன்று தயாரித்தல் அத்துடன் சமகால சமுதாயத்தின் நிகழ்வுகளைப் புரிந்து கொண்டு ஆராய்வதில் பரீட்சார்த்திக்குள்ள திறமையை மதிப்பிடல் இவ் வினாத்தாளில் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - வழங்கப்பட்ட பந்தி ஒன்றில் அல்லது பிரச்சினை ஒன்றில் கேட்கப்படும் இரண்டு வினாக்களுக்கு (02) விடையளித்தல் வேண்டும் (45 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான மூன்று (03) வினாக்கள் வழங்கப்படுவதுடன் அதில் இரண்டிற்கு விடையளித்தல் வேண்டும். (சிறு குறிப்பு எழுதும் வினா கட்டாயமாகும்)

| | |
|---|---|
| கட்டாய வினா (சிறு குறிப்பு) | - 30 புள்ளிகள் |
| ஏனைய வினாக்கள் | - 25 புள்ளிகள் |
| மொத்தம் | - 55 புள்ளிகள் |

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்தி தாம் சேவைக்கு சேர்ந்த மொழி மூலத்திலோ அல்லது வேறு அரச கரும மொழியொன்றின் மூலமோ இவ்வினாத்தாள் களுக்கு விடையளிக்க வேண்டும்.

(ii) இப்பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது நூற்றுக்கு 33 சதவீத (33%) புள்ளிகளையும் மூன்று பாடங்களுக்கு உரிய மொத்தப் புள்ளிகளின் சராசரியில் நூற்றுக்கு 40 (40%) புள்ளிகளையும் ஒரே பரீட்சையில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேற்று அட்டவணை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தமது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2013, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். சகல விண்ணப்பப் படிவங்களும் எல்லா வகையிலும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதிலும் சேவைச் சான்றிதழ் தன்னால் கையொப்பமிடப்பட்டுள்ளது என்பதிலும் திணைக்களத் தலைவர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.– பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

9. **விண்ணப்பப்படிவங்கள்**.- விண்ணப்பப்படிவங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் இலக்கம் 1.0 தொடக்கம் 4.0 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை மற்றைய பக்கத்திலும் அமைதல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக் கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்ய வேண்டும்.

விண்ணப்பப்படிவமானது இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப தயார்செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத் திலும் குறிப்பிடவும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட் டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ள தாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்து இத்தீவின் எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்குச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் படப்பிரதியொன்றை வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டு, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயரையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொழும்புக்கு புறம்பான பிரதேசமெனின் உங்களின் மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் தொலைநகல் மூலம் உங்களுக்கும் அனுப்ப ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கை கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும்.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

11. அரச கரும மொழிக்கொள்கையின் குறிக்கோள்களுக்காக சகல விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அவற்றினை அம்மொழியிலேயே பூரணப்படுத்தல் வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலுக்கு ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பான இறுதித் தீர்மானம் இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தைச் சார்ந்ததாக இருக்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2013, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2012 (2013)**

Examination for Promotion of Officers in Class III of Public Management Assistants' Service into Class II of the Service – 2012 (2013)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும். பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 பிரகாரம் நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமும், நகர இலக்கத்தையும் குறிப்பிடவும். இதைப் பின்னராக மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில்) : ----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) உதா.: SUNIL, A.B.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

1.4 நீங்கள் அரசாங்க சேவையில் சேர்ந்த பின்னர் உங்களது பெயரை மாற்றியுள்ளீரா? அவ்வாறாயின் முன்னர் இருந்த பெயரைக் குறிப்பிடவும் :-----.

2. சேவை நிலையமும் முகவரியும் :

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : -----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
(இம் முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : -----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 தபால் நகரம் :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.4 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 பிறந்த திகதி :
ஆண்டு : மாதம் : திகதி :

4. தேசிய அடையாள அட்டை இல.:

5. தற்போது வகிக்கும் பதவி :-

5.1 பதவி :-----.

5.2 நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

5.3 அச்சேவையில் வகுப்பு III இன் அலுவலராக நியமனத்தை உறுதிப்படுத்திய திகதி :----.

6. 6.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா? : ----.

6.2 பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றவில்லையெனில் செலுத்திய பரீட்சைக் கட்டணத்தின் பெறுமதி :----.

6.3 செலுத்திய அலுவலகம் :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.
திகதி :----.

நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றவில்லையெனில் பரீட்சைக் கட்டணமாக ரூபா 400 செலுத்தி அதற்காக பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும்.

7. **பரீட்சார்த்தியின் கூற்று** :-

I. மேற்படி என்னால் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானவை எனவும்,

II. அரச முகாமை உதவியாளர் சேவையின் அலுவலர் எனவும் ………… ஆந் திகதி எனது நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

III. 2013, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதியில் உடன் முன்னரான 04 வருட காலத்திற்குள் எல்லா வேதன ஏற்றங்களையும்/பெற்றுக்கொள்ள முடியுமான எல்லா சம்பள ஏற்றங்களையும் என்னால் உழைத்துப் பெறப்பட்டது எனவும்,

IV. இறுதியான சம்பள ஏற்றத் திகதியிலிருந்து தண்டனை அல்லது எச்சரிக்கைக்கு மேற்பட்ட பாரிய தண்டனை எதுக்கும் நான் ஆளாகவில்லை என்றும் கௌரவத் துடன் உறுதிமொழிகிறேன்.

இதில் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ அல்லது பிழையானதெனவோ அறியவருமிடத்து எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அறிவேன். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளை கடைப்பிடிப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

மேற்படி விபரங்கள் சரியானவை எனவும், மேற்காட்டப் பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் எனவும் வெளிப்படுத்து கின்றேன். நான் முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றேன் எனவும்/ரூபா ........................... பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதெனவும் சான்றுப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு நான் இணங்குகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(கீழ் குறிப்பிடப்படும் குறிப்பை பார்க்கவும்)

திகதி :----.

**குறிப்பு**.- திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்கு பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ................................. எனது அலுவலகத்தின் அலுவலர் எனவும், நான் தனிப்பட்ட முறையில் அவரை அறிவேன் எனவும் .......... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) திரு./திருமதி/செல்வி ....................... 2013, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதியன்று அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இல் நான்கு (04) வருட சேவையை பூர்த்தி செய்துள்ள அலுவலரெனவும் 2013.10.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையுள்ளவரெனவும்.

(ii) அவரின் பெயர் வழிக் கோப்பின் வகுப்பு III இன் நியமனக் கடிதத்தின் இலக்கம் ............ (நியமனக் கடிதத்தின் இலக்கம் எழுதவும்) எனவும்,

(iii) அவர் இவ்விண்ணப்பப்படிவத்தில் 1 முதல் 7 வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையா என பரிசீலனை செய்யப்பட்டதெனவும், அவை சரியானவை எனவும்,

(iv) அவர் இப்பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றுகின்றார் எனவும்/தொடர்புடைய பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளன எனவும் உறுதிப்படுத்து கின்றேன்.

(v) அவர் 4 வருடங்கள் தொடர்ச்சியாகவும் முனைப்பான சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ளார் எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

(தேவையற்றவையை கீறி விடவும்.)

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

10-99/1

---

## அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை வகுப்பு 1 இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2012 (2013)

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்கான தகவுப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகள் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2014, சனவரி மாதம் நடாத்தப் படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல்,

அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வருமாறு :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

மேற்படி ஏதேனுமோர் நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் எண்ணிக்கை இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச்செய்யப்படலாம் . விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப் படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படு கின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது அவர் அப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்வதாக கருதப்படலாகாது.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டங்களை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படுகின்ற தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பரீட்சை முடிவுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

(iv) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

4. இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் பத்து (10) வருட முனைப்பான சேவைக் காலத்தையும், அத்திகதியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும் பூர்த்தி செய்துள்ள அலுவலர் ஒருவராதல்.

(ii) அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படுகின்ற வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.- இப்பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி, பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்தி ஒருவர் சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்காக தகைமை அடைந்த திகதியாக கருதப்படும். மேற்படி தகைமைகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி அடைகின்ற அலுவலர்கள் வகுப்பு I இற்கு தரமுயர்வு பெற தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

5. **பரீட்சைத்திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்தினாலான ஒரு தகவுப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

| | பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | தாபன நடைமுறைகள் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| (ii) | அரசநிதி முகாமை | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| (iii) | விடய ஆய்வு | 1 மணித்தியாலம் | 100 |
| (iv) | பொது வினாத்தாள் | 1 மணித்தியாலம் | 100 |
| | மொத்தம் | | 400 |

*தாபன நடைமுறைகள்*.- தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் பிரயோக அறிவு எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :-

பகுதி I - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 08 வினாக்கள் (25 புள்ளிகள்)
பகுதி II - பகுதி கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

*அரச நிதி முகாமை :*

(அ) நிதி ஒழுங்கு விதி பற்றிய பிரயோக அறிவு
(ஆ) கணக்காய்வு பற்றிய அடிப்படை அறிவு
(இ) அடிப்படை வங்கிகள் தொடர்பான அனுபவம்
(ஈ) களஞ்சியப்படுத்தல் பற்றிய அடிப்படை அறிவு ஆகியன தொடர்பாக பரீட்சித்தல் இவ்வினாத்தாளின் நோக்கமாவது டன் இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டி ருக்கும்-

பகுதி I - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 08 வினாக்கள் (25 புள்ளிகள்)
பகுதி II - பகுதி கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

*விடய ஆய்வு*.- அலுவலக நிர்வாகம் பற்றிய ஒரு பிரச்சினைக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை ஆராயுமுகமாக வடிவமைக்கப்பட்ட பல் விருப்பு சுருக்க விடைகள் மற்றும் பகுதிக்கட்டமைப்பு முறையிலான கட்டுரை வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். கற்கைக்காக

விடயங்கள் வழங்கப்படுவதுடன் விடையளிக்க வேண்டிய வினாக்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

பகுதி I - பல்விருப்பு வினாக்கள் - 05 வினாக்கள் - (05 புள்ளிகள்)
பகுதி II - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 05 வினாக்கள் - (05 புள்ளிகள்)
பகுதி III - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 05 வினாக்கள் (90 புள்ளிகள்)

பொது வினாத்தாள்.- உள்நாட்டு, வெளிநாட்டு நடப்பு விவகாரங்களில் விண்ணப்பத்தாரரது பொது அறிவை பரீட்சிப்பது இதன் நோக்கமாகும். இவ்வினாத்தாள் 03 பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்விருப்பு வினாக்கள் - 32 வினாக்கள் - (16 புள்ளிகள்)
பகுதி II - வழங்கப்படும் 04 தலைப்புக்களில் 02 இற்கு சிறுகுறிப்பு எழுதுதல் வேண்டும். - (36 புள்ளிகள்)
பகுதி III - வழங்கப்படும் கட்டுரை முறையிலான 04 வினாக்களில் 02 இற்கு விடையளித்தல் வேண்டும். - (48 புள்ளிகள்)

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்திகள் சேவையில் சேர்ந்த மொழியிலே அல்லது வேறு அரச கரும மொழியொன்றில் இவ்வினாப்பத்திரங்களுக்கு பதில் எழுத வேண்டும். தெரிவுசெய்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) இப்பரீட்சையில் சித்தி அடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் நூற்றுக்கு 40 வீத (40%) புள்ளிகளும் 160 அல்லது அதற்கு கூடிய மொத்தப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேற்று அட்டவணை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இம் மாதிரிப் படிவ உருவில் தமது விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2013, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக ''பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பும்போது திருப்திகரமான சேவை பற்றிய சான்றிதழ் ஒன்றையும் அதில் உள்ளடக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் எல்லா அம்சங்களிலும் சரியாக பூர்த்தி செய்யப் பட்டுள்ளது என்பதிலும் தன்னால் சேவைச் சான்றிதழில் கையொப்பம் இடப்பட்டுள்ளதென்பதிலும் திணைக்களத் தலைவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். பரீட்சை ஆணையாளரிடம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

9. **விண்ணப்பப்பத்திரங்கள்**.- இலக்கம் 1.1 இலிருந்து 1.9 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை மறு பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் ''ஏ4'' அளவிலான ஒரு தாளில் **தாம் பரீட்சைக் குத் தோற்றும் மொழியில்** விண்ணப்பத்தை தயாரித்துக் கொள்ள வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக் கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்யவேண்டும். மாதிரி விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமைபெறாத தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதாகவுள்ளதா என்பதைப் பற்றி பரீட்சார்த்தியே பொறுப்புக் கூறுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை எனினும் அடுத்த தடவைகளின் போது அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் 400 ரூபா ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவுவைக்கக்கூடியதாக இத்தீவிலுள்ள ஏதேனுமொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் படப்பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

உரியவாறு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து உரிய திகதிக்கு முன்னர் அவ்விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியுடன் அச்சிடப்பட்ட அனுமதி அட்டையையும் அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையின்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டு, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயரையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க நடவடிக்கை

எடுத்தல் வேண்டும். கொழும்புக்குப் புறம்பான பிரதேசமெனின் உங்களின் மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் பரீட்சை விண்ணப்பப் படிவத்தின் பிரதியையும் தொலைநகல் மூலம் உங்களுக்கும் அனுப்ப ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும்.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

11. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

12. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஒவ்வாமை தோன்றுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலே முன்னணியில் இருக்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு,
2013, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு I இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2012 (2013)**

**Examination for Promotion of Officers in Class II of Public Management Assistants' Service to Class I - 2012 (2013)**

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.
பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 பிரகாரம் நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமும் நகர இலக்கத்தையும் குறிப்பிடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் : ----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
உதாரணம் :- SUNIL, A. B.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் : ----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.5 நீங்கள் அரச சேவையில் சேர்ந்த பின் உங்களின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா? :----.
ஆமெனில், முன்னைய பெயரை குறிப்பிடவும் :----.

1.6 சேவை நிலையமும் முகவரியும் :-
1.6.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)

1.6.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.7 பால் :-
பெண் - 1
ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

1.8 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

1.9 தேசிய அடையாள அட்டை இல. :
☐☐☐☐☐☐☐☐☐☐

2. தற்போது வகிக்கும் பதவி :-
2.1 பதவி :----.

2.2 நியமனக் கடித இலக்கமும் திகதியும் :----.

2.3 குறித்த சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலராக நியமனம் பெற்ற திகதி :----.

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2.4 நீங்கள் சேவைக் காலத்திற்குள்ளான எல்லா சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளீர்களா? :----.

இல்லாவிட்டால், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

2.5 நீங்கள் எத்தகையதுமான ஒரு தண்டனை/தண்டனைகளைப் பெற்றிருப்பின் அது பற்றி சுருக்கமாக குறிப்பிடவும் :----.

2.6 நீங்கள் தற்போது ஒரு கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச் சட்ட சபையின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.

2.7 நீங்கள் வெளிநாட்டுத் தொழில் ஒன்றுக்காக அல்லது வேறு ஏதேனும் அலுவலுக்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.

3. 3.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர்களா ? : ----.

3.2 பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :----.

பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய திகதி :----.

| |
|---|
| நீங்கள் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றா விட்டால் 400 ரூபா பெறுமதியான பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டி விடவும். |

4. விண்ணப்பதாரரின் கூற்று.-

(1) மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் உண்மையானவை எனவும்,

(2) அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர் என்றும் ...... ஆந் திகதி நான் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இற்கு நியமனம் பெற்றேன் என்றும்,

(3) 2013, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் 10 வருடங்கள் முனைப்பான சேவைக்காலம் மற்றும் 05 வருட திருப்தி கரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளேன் என்றும்,

(4) நான் முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றுகின்றேன் என்றும்/பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளன என்றும் பயபக்தியுடன் உறுதிப்படுத்து கிறேன்.

இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரியவருமாயின் எனக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அறிவேன். மேலும் பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.
(அடிக்குறிப்பை பார்க்கவும்)

திகதி :----.

**குறிப்பு**.- (1) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப் படுவதற்கு முன்னர் வகித்த பொது எழுதுநர் சேவை அல்லது அதனோடிணைந்த சேவைகளின் வகுப்பு II/ II "அ" வின் சேவைக் காலத்தை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் சேவைக் காலத்தை கணிப்பீடு செய்யும் போது உரியதாகக் கொள்ள வேண்டும்.

(2) திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**.- எனது அலுவலகத்தின் அலுவலர் திரு./திருமதி/செல்வி ....................... என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ................ ஆந் திகதி என் முன்னிலையில் இதில் கையொப்பம் இட்டார் என்றும் சான்றுப்படுத்து கிறேன்.

-----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்,
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

(1) திரு./திருமதி/செல்வி .................................. என்பவர் 2013, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர் என்றும் ................. ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை உடையவர் என்றும்,

(2) அவரது சுயவிபரக் கோவையின்படி வகுப்பு II இன் நியமனக் கடிதத்தின் இலக்கம் ................................ (நியமனக் கடிதத்தின் இலக்கத்தை குறிப்பிடவும்) என்றும்,

(3) அவர் விண்ணப்பத்தின் 1.0 முதல் 4.0 வரையுள்ள பந்திகளில் தரப்பட்டுள்ள விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டது என்றும் அவை சரியானவை என்றும்,

(4) அவர் முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்று கிறார் என்றும்/உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

(தேவையற்ற சொற்களை கீறிவிடவும்).

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

10-99/2

---

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும்

ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2014, சனவரி மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. இப்பரீட்சை கீழ்க்குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும் நகரங்கள் மற்றும் அதற்குரிய நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| பதுளை | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நிலையம் ஒன்றுக்கான எண்ணிக்கை போதியளவானதாகக் காணப்படாதுவிடின் மேற்படி பரீட்சை நிலையம் இரத்துச்செய்யப்பட்டு மேற்படி விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவார்கள். விண்ணப் பிக்கும் நகரத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. இப்பரீட்சையினை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வ தற்கோ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4. 2013.07.01 ஆந் திகதியன்று ஏற்பட்டுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்புக்கான பதவி வெற்றிடங் களின் 35% இனை இப்பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் பூர்த்திசெய்யப்படும்.

5. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 (IV) இன் MN 07/2006 - A சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 20,030 - 11 x 365 - 18 x 500 - ரூபா 33,045 ஆகும்.

6. **தகைமைகள்**.- 2013.07.01 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 5 வருட காலத்தில் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத் தைப் பூர்த்திசெய்துள்ள மத்திய அரசைச் சேர்ந்த-

(அ) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு I இலுள்ள அலுவலர்களும்

(ஆ) குறைந்தபட்சம் சேவையில் 8 வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்பான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு II இலுள்ள அலுவலர்களும்

(இ) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் மற்றும் II ஆம் வகுப்புக்களிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றினைப் பெற்றுள்ள பட்டதாரி அலுவலர் ஒருவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமைகளைப் பெறுவர்.

**குறிப்பு**.- திருப்திகரமான சேவைக்காலம் மற்றும் உயிர்ப்பான சேவைக்காலம் என்பன அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப்பிரமாணக் குறிப்பின் 2.6, 2.7 ஆம் பந்திகளின்கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித் தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அதனை தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி 25.5 x 21 (ஏ4) அளவிலான தாளில் விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். 1 முதல் 4 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும், 5 தொடக்கம் 10 வரையான இலக்கங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படி வங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படி வத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமை யாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். (பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக் கூடும்.)

(ஆ) விண்ணப்பதாரிகளால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அதன் நிழற்படப் பிரதியொன்றுடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தலைவரின் பரிந்துரை யைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நிழற்படப்பிரதியை சுய விபரக்கோவையில் உள்ளடக்குதல் வேண்டும். அதன் பின்னர் மூலப்பிரதியை தமது திணைக்களத் தலைவரூடாக "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக 2013, நவெம்பர் 4 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். திணைக்களத் தலைவரூடாக அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்துக்கு மேலதிகமாக வேறு எதுவித விண்ணப்பப் படிவங்களின் பிரதிகளையும் தனிப்பட்ட வகையில் அனுப்பிவைத்தல் ஆகாது. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் சகல வகையிலும் முழுமைப்படுத்தப்பட்டதென திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதோடு விண்ணப்பப்படிவத்திலுள்ள 12 ஆவது உறுதியுரையிலும் கையொப்பமிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அல்லது அத்திணைக்களத்தின் அலுவலருக்கோ அல்லது தனிப்பட்ட முகவரிக்கோ அனுப்பப்படுதலாகாது. விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(இ) (i) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. முதற் தடவையாகத் தோற்றும் விண்ணப்பதாரிகளெனக் கருதப்படுவது பொது எழுதுவினைஞர் சேவையில் உயர் வகுப்புக்கு நியமிப்பதற்காக 1972, 1973, 1974, 1975, 1976, 1978, 1979, 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 அல்லது 2001 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1985 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின் உயர் வகுப்பிற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின் உயர் வகுப்பிற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1999 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அரச புத்தகக் கட்டுநர் சேவையின்/அரச சிறாப்பர் சேவையின் அல்லது அரச களஞ்சியப் பொறுப்பாளர் சேவையின் உயர் வகுப்பிற்கான மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு மற்றும் 2006, 2007, 2011 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் வகுப்பிற்குத் தரமுயர்த்துவதற்கான மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் ஒரு பரீட்சைக்கேனும் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மட்டுமே ஆவர்.

(ii) பரீட்சைக்கான கட்டணம் 400 ரூபா ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் அண்மையிலுள்ள மாவட்டச் செயலகம்/கச்சேரி/பிரதேச செயலகத்திற்கு வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தியமைக்காகப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டிவிட வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனளிக்கும்.

(ஈ) விண்ணப்பப்படிவமோ அல்லது அது தொடர்பான கடிதம் ஒன்றோ தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப் பட மாட்டாது.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (அ) உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய முறையில் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து உரிய திகதிக்கு முன்னர் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் பரீட்சைத் தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதிப்பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை அம்மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாள ருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாளவேண்டிய விதிக்கோவை ஒன்று இவ்வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப் படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பனவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையிடும் வேளையில் பின்வருவனவற்றை அதாவது விண்ணப்பப்படிவம் மற்றும் தங்கள் வசமுள்ள பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் என்பனவற்றை வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி விபரங்களுடனான ஒரு கோரிக்கைக் கடிதம் மற்றும் அனுமதி அட்டை அனுப்பப்படவுள்ள ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் என்பதனை அவசியமாகக் கருதாது.

9. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

10. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.- (அ) இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் அளித்துள்ள தகவல்கள் பிழையானவை எனப் பிற்காலத்தில் தெரியவந்தால் அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் மேலும் ஒரு நியமனம் பெறுவதற்காக கவனத்திற்கொள்ளப்படாததுடன் இப்பரீட்சை காரணமாக வழங்கப்பட்டுள்ள ஒரு நியமனத்தை இல்லாதொழிக்கவும் அல்லது பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

11. **பரீட்சை மொழி ஊடகம்**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் சேவைக்குச் சேர்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12. **பரீட்சைத் திட்டம்**.- எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| பாடம் | காலம் (மணித்தியாலங்கள்) | புள்ளிகள் |
|---|---|---|
| 1. அலுவலக முகாமை | 02 | 100 |
| 2. அலுவலக முறைமைகள் | 02 | 100 |
| 3. தாபன நடைமுறைகள் | 02 | 100 |
| 4. அரச நிதி முகாமை | 02 | 100 |
| 5. பொது வினாத்தாள் | 1 1/2 | 100 |
| மொத்தம் | | 500 |

13. **பாடத்திட்டம்**.- பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் பாடங்கள் பற்றிய அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது :-

(i) அலுவலக முகாமை (காலம் : 2 மணித்தியாலங்கள்)
- 100 புள்ளிகள்

நிறுவன கட்டமைப்பு, நிறுவனக் கோட்பாடுகள், தொழில் பகுப்பாய்வும் மதிப்பீடும், தலைமைத்துவம், மேற்பார்வையும் தீர்மானமெடுத்தலும், தொடர்பாடல், பொதுசனத் தொடர்புகள், ஒருங்கிணைப்பும் பிரச்சினை தீர்த்தலும்.

(ii) அலுவலக முறைமை (காலம் : 2 மணித்தியாலங்கள்)
- 100 புள்ளிகள்

அலுவலக முறைமைக் கோட்பாடுகள், அலுவலக நடைமுறைகள், பதிவுகளும் கோவையிடலும், படிவங்களை வடிவமைத்தலும் கட்டுப்பாடும், கடிதத் தொடர்பு, அலுவலக உபகரணங்களின் பயன்பாடு மீதான கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலமும் சுற்றுப்புறமும், தொழில் விவரணம், வேலை மற்றும் முறைமைகள் தொடர்பான ஆய்வு, வேலைச்சுமையை அளத்தல், அலுவலக தொழிற்பாடுகளின் கையேடு.

(iii) தாபன நடைமுறைகள் (காலம் : 2 மணித்தியாலங்கள்)
- 100 புள்ளிகள்

அரச சேவைக்கு ஆட்சேர்க்கும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், அரச உத்தியோகத்தர்களின் தாபன நடைமுறைகள், தனிநபர் கோவையினைப் பேணுதல், அரச உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, சேவை முடிவுறுத்தல் என்பனவற்றுக்கான அதிகாரக் கையளிப்பு, நலனோம்பல் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான சிறப்புரிமைகள், அரசாங்கத்தினால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் பற்றிய பொது அறிவு பரீட்சிக்கப்படும்.

(iv) அரச நிதி முகாமை (காலம் : 2 மணித்தியாலங்கள்)
- 100 புள்ளிகள்

வருடாந்த மதிப்பீடுகளும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்புக்களும், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்களைக் கையளித்தல், பணத்தைப் பெறுதல், கணக்கீடும் ஏற்றலும், கொடுப்பனவுகள், அரசாங்கப் பணத்தின் கட்டுக்காப்பு, கட்டுநிதிகளும் வங்கிக் கணக்குகளும், வழங்கல்களும் சேவைகளும், கேள்வி நடைமுறைகள், களஞ்சிய கணக்கெடுப்பு, கணக்காய்வு ஐய வினாக்கள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவின சாராம்சம், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றும் நிதி முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஏடுகளும், அரசாங்கத்தினால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் பற்றிய பொது அறிவு பரீட்சிக்கப்படும்.

(v) பொது வினாத்தாள் (காலம் : 1 1/2 மணித்தியாலங்கள்)
- 100 புள்ளிகள்

அரசாங்க நிர்வாக இயல்பு, அரசாங்க நிர்வாகத்தின் கட்டமைப்பு, அரச கொள்கைகளும் புதிய சீர்திருத்தங்களும், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஓம்புட்ஸ்மன்), பொது முறைப்பாடுகளுக்கான பாராளுமன்றக் குழு, அலுவலக கலாசாரம், நன்னெறிகளும் விழுமியங்களும், முறையான அலுவலக சூழலை உருவாக்கலும் அலுவலர் குழாமின் நலனோம்பல்களும், உத்தியோக மற்றும் சிவில் அந்தஸ்து மீதான சமூக அங்கீகாரம், சேவை பெறுநர்கள் நோக்கிய அரச அலுவலர்களின் கடப்பாடுகள்.

14. **நியமனத்திற்காக தெரிவுசெய்தல்**.- இப்பரீட்சையில் பெற்றுக்கொள்கின்ற மொத்தப் புள்ளிகளின் ஒழுங்குவரிசைப்படி தகைமை பரிசீலனை செய்வதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் முன்னிலைக்கு அழைக்கப்படுவர். அந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தெரிவுசெய்யப்படுகின்ற பரீட்சார்த்திகள் வெற்றிடங்கள் நிலவும், இத்தீவின் எப்பிரதேசத்திலேனும் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றில் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். இணைப்புச் செய்யப்படும் அலுவலகத்தில் நியமனத்தை ஏற்க மறுத்தால் அவரின் நியமனத்தை இரத்துச்செய்து அடுத்ததாக தகைமையுடையவர்களை ஒழுங்கு வரிசையாக அழைத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

15. அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் 1372/23 ஆம் இலக்க 2004.12.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தத்திற்கும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும் அமைய நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

16. குறிப்பிட்ட வெற்றிட எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கும், இவ் ஒழுங்குவிதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் தீர்மானம் எடுப்பதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2013, செத்தெம்பர் 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தேசிக்கும் நகரத்தையும் நகர இலக்கத்தினையும் குறிப்பிடவும்.

| நகரத்தின் பெயர் | நகர இலக்கம் |
|---|---|
| | |

விண்ணப்பிக்கும் மொழி : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ-ம் : SILVA, A.B.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இல. :----.

2. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 தொலைபேசி இலக்கம் :

3. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4. பால் :
பெண் - 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

5. விவாக நிலை :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

6. 2013.07.01 ஆந் திகதியில் உள்ளவாறு வயது :-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. பின்வரும் பரீட்சைகளில் ஏதேனும் ஒன்றிற்கு நீங்கள் தோற்றியுள்ளீர்களா ? 1972, 1973, 1974, 1975, 1976, 1978, 1979, 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பொது எழுதுநர் சேவையின்/1985, 1999 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின்/ 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின்/1999 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட அரச கணக்குப் பதியுநர் சேவையின்/1999 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட அரச சிறாப்பர் சேவையின் ஆட்சேர்ப்புப் பரீட்சைகள்/2006, 2007, 2011 ஆம் ஆண்டுகளில் நடாத்திய அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்குத் தரமுயர்த்தும் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைகளில் ஏதேனுமொன்றிற்கு தோற்றியுள்ளரா ? :----.

8. (i) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு/பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/ அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

(ii) 2013.07.01 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்தச் சேவைக்காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

(iii) 2013.07.01 ஆந் திகதிக்கு உடன் முந்திய 5 வருட சேவைக்காலப்பகுதிக்குள் பெற்றுள்ள சம்பளமற்ற விடுமுறை நாட்கள் :----.

(iv) 2013.07.01 ஆந் திகதியில் உள்ளவாறான முனைப்பான சேவைக்காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

(v) அரச முகாமை உதவியாளர் சேவையில்/பொது எழுதுநர் சேவையில்/ அரச தட்டெழுத்தாளர் சேவையில்/ அரச சுருக்கெழுத்தாளர் சேவையில்/ அரச கணக்குப் பதியுநர் சேவையில்/அரச சிறாப்பர் சேவையில்/அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவையில் நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ----.

(vi) தற்போதைய வகுப்பும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :----.

(vii) நீங்கள் பட்டதாரி ஆயின், பட்டம் பெற்ற ஆண்டும் பல்கலைக்கழகத்தின் பெயரும் :----.

(viii) பட்டம் செயல்வலுப் பெறும் திகதி :----.

9. (i) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு/பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/ அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு சேர்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி :----.

(ii) போட்டிப் பரீட்சை இன்றி நீங்கள் பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/ அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/ அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் குறித்த சேவைக்குச் சேர்வதற்காக நீங்கள் தகைமையடைந்த மொழி மூலம் :----.

10. பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு ஒட்டவும் :

| |
|---|
| பற்றுச்சீட்டின் பின்புறத்தின் மேற்புறத்தில் மட்டும் பசையினைப் பூசி கவனமாக கழறாதவாறு பணப் பற்றுச்சீட்டினை ஒட்டவும். |

11. **பரீட்சார்த்தியின் உறுதியுரை** :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில்,

(அ) 2013.07.01 ஆந் திகதிக்கு உடன்முந்திய 5 வருட காலத்திற்குள் கிடைக்கவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன், (திணைக்கள சேவைப் பரீட்சைகளில் சித்தியடையும் நிபந்தனையான சம்பள ஏற்றங்கள் தவிர்ந்த) அக்காலப் பகுதிக்குள் எவ்விதத்திலான ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகவில்லை எனவும்,

(ஆ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகைமையுள்ளது என்றும் இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், நான் முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ பரீட்சைக் கட்டணம் செலுத்திய ...................................... ஆம் இலக்க ஆந் .................................. திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்*, இப்பரீட்சை பற்றிய பிரமாணத்தின்படி நான் தகைமையற்றவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்நிலையிலும் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான எத்தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன்.

----,
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

12. **திணைக்களத் தலைவரின் சான்றுரை** :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி* ........................................................ எனும் விண்ணப்பதாரர் ................................................................ ஆந் திகதி முதல் இவ் அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும், .......................... .................................... ஆந் திகதியன்று உள்ளவாறு ஐந்து வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்பட்டதென்றும் அவை சரியானவை என்றும், இவர் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பதற்கு தகுதியுடையவரென்றும்/ குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும்*, விண்ணப்பதாரர் உரிய வர்த்தமானி அறிவித்தலின்படி பரீட்சைக்குரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்றும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 13 ஆம் இலக்க 1972.10.02 ஆந் திகதிய சுற்றறிக்கை கடிதப்படி அலுவலரின் வரலாற்றுத் தாளில் அதுபற்றி குறிக்கப்பட்டதென்றும் 2013 ................... .............. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முன்னளிப்பு இலக்கமும் இவர் அரச முகாமைத்துவ சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதத்தின் திகதியும் முறையே .................................................. மற்றும் ....................... ............................. ஆகும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)
திகதி :----.

*தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக.

10-99/3

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

### பகுதிநேர விரிவுரையாளர்கள்/போதனாசிரியர்களாக வெளியக வளவாளர்களைப் பதிவுசெய்தல் - கல்வி ஆண்டு 2014

இத்திணைக்களத்தின்கீழ் இயங்கும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர்/அதிபர்களினால் இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப வெளியக வளவாளர்களாக விரிவுரையாளர்கள்/ போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வெளியக வளவாளர் பதவிக்குத் தேவையான விண்ணப்பம், பாடவிபரங்கள் என்பவற்றை அவரவர் கடமையாற்ற விரும்பும் தொழில்நுட்பவியல் கல்லூரிகள்/தொழில்நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர்/அதிபர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதனை தங்களது முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவு நீளம் கொண்ட கடித உறையினை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெளியக வளவாளர் எனக் குறிப்பிடவும். இவ்விபரங்களை அதிபர்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

3. பாட விபரங்கள், விண்ணப்பப்படிவங்கள் என்பவற்றைப்பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 30.11.2013 ஆகும்.

4. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (i) விண்ணப்பதாரிகள் தமது கல்வித் தகைமை, தொழிற்தகைமை, தொழில்நுட்பத் திறன் போன்ற சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பிவைக்க வேண்டும் ;

(ii) **கொடுப்பனவு**.- விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமை, தொழிற்தகைமை, அனுபவம் என்பவற்றுடன் பயிற்சிநெறிகளின் தரம் என்பவற்றிற்கமைய ஒரு மணித்தியாலத்திற்கு 200 முதல் 400 ரூபா வரை வேறுபடும்.

(iii) **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் முறை**.- அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் வெளியக வளவாளரால் தங்களது வழமையான கடமைக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை திணைக்களத் தலைவர் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) **தெரிவு**.- தொழில்நுட்பவியல் கல்லூரி/தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளரினால்/அதிபரினால் நேர்முகப் பரீட்சை ஒன்றுநடாத்தப்பட்டு விண்ணப்பதாரிகளின் தகைமை, கற்பித்தல் அனுபவம் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு தெரிவுசெய்யப்படுவர். தெரிவுசெய்யப்பட்டவர்களை குறித்த கல்லூரிகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு முன்னறிவித்தல் எதுவுமின்றி கல்லூரி பணிப்பாளர்/அதிபரினால் நிறுத்த முடியும்.

(v) மேலதிக கொடுப்பனவுகள் எதுவுமின்றி பாடத்திற்கான உள்ளகப் பரீட்சைகளை இவ்வெளியக வளவாளர்கள் நடாத்துதல் வேண்டும்.

5. இப்பதவி 2014 ஆம் வருட கல்வி ஆண்டிற்கு மட்டுமே உரியதாகும். தேவையேற்படின் இதற்கு முன்னதாகவேனும் முடிவுக்கு கொண்டுவரலாம்.

6. ஒரு பாடத்திற்கு மேல் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டு முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் தொழில்நுட்பவியல் கல்லூரி/தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர்/அதிபர் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எஸ். பாலசுப்ரமணியம்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்.

த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
www.dtet.gov.lk

தொழில்நுட்பவியல் கல்லூரிகளின்/தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியல்

| தொடர் இல. | தொழில்நுட்பவியல் கல்லூரிகள்/ தொழில்நுட்பக் கல்லூரிகள் | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி | ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 | கொழும்பு |
| 2 | காலி தொழில்நுட்பவியல் கல்லூரி | களுவெல்ல, காலி | காலி |
| 3 | கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி | அறுப்பொல, கண்டி | கண்டி |
| 4 | யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி | பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 5 | பதுளை தொழில்நுட்பவியல் கல்லூரி | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | பதுளை |
| 6 | அனுராதபுரம் தொழில்நுட்பவியல் கல்லூரி | புதிய நகரம், அனுராதபுரம் | அனுராதபுரம் |
| 7 | குருநாகல் தொழில்நுட்பவியல் கல்லூரி | புத்தளம் வீதி, குருநாகல் | குருநாகல் |
| 8 | அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரி | இங்கினியாகல வீதி, அம்பாறை | அம்பாறை |
| 9 | இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரி | பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 10 | கேகாலை தொழில்நுட்பக் கல்லூரி | கச்சேரி வீதி, கேகாலை | கேகாலை |
| 11 | இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரி | காலி வீதி, இரத்மலானை | கொழும்பு |
| 12 | மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி | மெத்தவத்தை, மாத்தறை | மாத்தறை |
| 13 | சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி | அம்பாறை வீதி, சம்மாந்துறை | அம்பாறை |
| 14 | களுத்துறை தொழில்நுட்பக் கல்லூரி | கலமுல்லை, களுத்துறை | களுத்துறை |
| 15 | வறக்காப்பொலை தொழில்நுட்பக் கல்லூரி | அம்பகல வீதி, வறக்காப்பொல | கேகாலை |
| 16 | குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி | பன்னல வீதி, குளியாப்பிட்டி | குருநாகல் |
| 17 | பாத்ததும்பறை தொழில்நுட்பக் கல்லூரி | நவயாலதென்ன, கட்டுகஸ்தோட்டை | கண்டி |
| 18 | நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி | ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா | நுவரெலியா |
| 19 | ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி | கொடகம, ஹோமாகம | கொழும்பு |
| 20 | பெலியத்தை தொழில்நுட்பக் கல்லூரி | புவக்தண்டவ, பெலியத்தை | ஹம்பாந்தோட்டை |
| 21 | ஹசலக தொழில் நுட்பக் கல்லூரி | யோத எல வீதி, ஹசலக | கண்டி |
| 22 | தம்புள்ளை தொழில் நுட்பக் கல்லூரி | மாத்தளை வீதி, தம்புள்ளை | மாத்தளை |
| 23 | பலப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி | வந்ததுவ புகையிரதநிலைய வீதி, பலப்பிட்டி | காலி |
| 24 | வாரியப்பொலை தொழில் நுட்பக் கல்லூரி | சிலாபம்வீதி, வாரியப்பொலை. | குருநாகல் |
| 25 | மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி | மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு | மட்டக்களப்பு |

| தொடர் இல. | தொழில்நுட்பவியல் கல்லூரிகள்/ தொழில்நுட்பக் கல்லூரிகள் | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 26 | பண்டாரவளை தொழில் நுட்பக் கல்லூரி | வேவதென்ன, பண்டாரவளை | பதுளை |
| 27 | மொனராகலை தொழில் நுட்பக் கல்லூரி | சிறிகல, மொனராகலை | மொனராகலை |
| 28 | கம்பஹா தொழில் நுட்பக் கல்லூரி | வெரலவத்தை, யக்கலை | கம்பஹா |
| 29 | திருகோணமலை தொழில் நுட்பக் கல்லூரி | மிஹிந்தபுரம், திருகோணமலை | திருகோணமலை |
| 30 | தெஹியத்தகண்டி தொழில் நுட்பக் கல்லூரி | மஹாவானவெல, தெஹியத்தகண்டி. | அம்பாறை |
| 31 | மாத்தளை தொழில் நுட்பக் கல்லூரி | எம்.சீ. வீதி, மாத்தளை | மாத்தளை |
| 32 | வீரவிலை தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், வீரவிலை. | ஹம்பாந்தோட்டை |
| 33 | மெதகம தொழில் நுட்பக் கல்லூரி | மெதகம. | மொனராகலை |
| 34 | பொலன்னறுவை தொழில் நுட்பக் கல்லூரி | வித்தியாபுரம், பொலன்னறுவை. | பொலன்னறுவை |
| 35 | எம்பிலிப்பிட்டி தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், எம்பிலிப்பிட்டி. | இரத்தினபுரி |
| 36 | வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி | மன்னார் வீதி, வவுனியா | வவுனியா. |
| 37 | அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரி | பிரதான வீதி, அக்கரைப்பற்று | அம்பாறை |
| 38 | ஆணமடு தொழில் நுட்பக் கல்லூரி | கம்முதாபூமி, தம்மன்னகம ஆணமடுவ | புத்தளம் |
| 39 | மன்னார் தொழில் நுட்பக்கல்லூரி | *கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பை பார்க்கவும் | மன்னார் |

* மன்னார் தொழில் நுட்பக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அதிபர், வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி, மன்னார் வீதி வவுனியா என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

10-64

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் - 2014

இவ்வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் தொழில்நுட்பவியல் கல்லூரிகள் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகள் தொடர்பாக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகளுள் அவர்கள் தகைமைகளுக்கும் திறமைகளுக்கும் அமைய கற்கை நெறிகளுக்கு தேவையான எண்ணிக்கைகளுக்கு ஏற்ப மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 13" x8"அளவிலான தாளில் தயாரித்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி 13 இல் கூறப்பட்டதற்கு இணங்க, ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திலும் 10 ரூபா முத்திரை ஒட்டப்பட்டு அதன் மேல் விண்ணப்பதாரர் தனது வழமையான கையொப்பம் இடுவதன் மூலம் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2013.11.30 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் உரிய தொழில் நுட்பவியல் கல்லூரியின் / தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளருக்கு / அதிபருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். இவ் விண்ணப்பங்களை இத் திணைக்களத்திற்கோ அல்லது ஏதாவதொரு அதிகாரியின் அலுவலக அல்லது சொந்த முகவரிக்கோ அனுப்ப வேண்டாம் என விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

3. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியின் பெயர், அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

**உதாரணம்**: எந்திரவியல் பட வரைவியலுக்கான தேசிய சான்றிதழ் ETC 05

4. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் கவனமாக கற்கை நெறியின் பெயர், கற்கை நெறியின் குறியீட்டு எண், பயிற்சி நெறியைத் தொடரவிருக்கும் தொழில் நுட்பவியல் கல்லூரி / தொழில் நுட்பக் கல்லூரி, போதனா மொழி என்பவற்றை சரிவரக் குறிப்பிடல் வேண்டும். கல்லூரி, கற்கைநெறி, போதனாமொழி என்பவற்றை மாற்றுவதற்கான வேண்டுகோள் பின்னர் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

6. கீழ்க்குறிக்கப்படும் வகையில் பகுதி நேர மற்றும் மாலை நேர பயிற்சி நெறியை தொடரும் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சிக் கட்டணங்கள் அறவிடப்படும்.

(i) பகுதி நேரம் / மாலைநேர - சான்றிதழ் பயிற்சி நெறிகள் (ஒரு வருடத்திற்கு மேற்பட்டவை) வருடமொன்றிற்கு 2,000 ரூபா.

(ii) பகுதி நேரம் / மாலைநேர - சான்றிதழ் பயிற்சி நெறிகள் (ஒரு வருடமும் , குறுங்கால பயிற்சி நெறிகள் ஒரு வருடத்திற்கு உட்பட்டவையும்) ஒவ்வொரு பாடநெறிக்கும் 1,500 ரூபா.

7. ஒவ்வொரு விண்ணப்பதாரிகளின் கவனத்திற்காக இவ்வறிவித்தலின் இறுதியில் பயிற்சி அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது. அவ் அட்டவணையானது பயிற்சி நெறியின் தன்மை, ஒவ்வொரு பயிற்சிநெறிக்கும் தேவைப்படும் தகைமைகள், பயிற்சிநெறிகள் நடாத்தப்படும் கல்லூரிகள், கற்கைநெறிக்கான மொழி மூலம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. பயிற்சி நெறிகள் நடாத்தப்படவிருக்கும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் முகவரிகள் தொழில்நுட்பவியல் கல்லூரி / தொழில்நுட்பக்கல்லூரிகளின் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளது.

8. தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரிகள்:

(i) நற்பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும் ;
(ii) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போதே அனுமதி பெறுவதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

9. தகுதியான பரீட்சார்த்திகள் ஒரு பொது உளச்சார்புப் பரீட்சை மூலமும் ஓர் நேர்முகப்பரீட்சைப் பெறுபேறுகள் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

10. ஏதாவது ஆவணங்களையோ அல்லது அவற்றினது பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கக்கூடாது. தமது தகைமையை நிரூபிப்பதற்கு தேவையான ஏற்கக்கூடிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போது வழங்கத் தவறும் மாணவர்களது அனுமதி இரத்துச் செய்யப்படும்.

11. முழு நேரக் கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்ப வருமான நிலைமைகளுக்கேற்ப கல்லூரி வகுப்புக்களுக்குச் சமுகமளிக்கும் நாளொன்றுக்கு 50 ரூபா வீதம் மாணவர் உதவிக் கொடுப்பனவானது மாதம் ஒன்றிற்கு 1000 ரூபா இற்கு மேற்படாது வழங்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த முழுநேரக் கற்கை நெறி மாணவர்களுள் ஏறத்தாழ 1300 பேர், வருடமொன்றிற்கு 2,500 ரூபா வீதம் மாணவர் உதவு தொகையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

12. சகல ஆவணங்களின் நம்பகத்தன்மைக்கும் விண்ணப்பதாரியான அவள்/அவன் முழுப்பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மை உறுதி செய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

13. இவ் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பவியல் கல்லூரிகளில் / தொழில் நுட்பக் கல்லூரிகளில் 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்படும் எல்லா பாடநெறிகளையோ அல்லது குறிப்பிட்ட பாடநெறிகளையோ நடாத்த, தொழில் நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமே தீர்மானிப்பார்.

விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தனித்தனியான விண்ணப்பப் படிவங்களை பயன்படுத்தி ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

எஸ். பாலசுப்ரமணியம்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்.

த.பெ.இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
www.dtet.gov.lk

தொழில்நுட்பவியல் கல்லூரிகளின்/தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியல்

| தொடர் இல. | தொழில்நுட்பவியல் கல்லூரிகள்/ தொழில்நுட்பக் கல்லூரிகள் | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி | ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 | கொழும்பு |
| 2 | காலி தொழில்நுட்பவியல் கல்லூரி | களுவெல்ல, காலி | காலி |
| 3 | கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி | அறுப்பொல, கண்டி | கண்டி |
| 4 | யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி | பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 5 | பதுளை தொழில்நுட்பவியல் கல்லூரி | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | பதுளை |
| 6 | அனுராதபுரம் தொழில்நுட்பவியல் கல்லூரி | புதிய நகரம், அனுராதபுரம் | அனுராதபுரம் |
| 7 | குருநாகல் தொழில்நுட்பவியல் கல்லூரி | புத்தளம் வீதி, குருநாகல் | குருநாகல் |
| 8 | அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரி | இங்கினியாகல வீதி, அம்பாறை | அம்பாறை |
| 9 | இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரி | பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 10 | கேகாலை தொழில்நுட்பக் கல்லூரி | கச்சேரி வீதி, கேகாலை | கேகாலை |
| 11 | இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரி | காலி வீதி, இரத்மலானை | கொழும்பு |
| 12 | மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி | மெத்தவத்தை, மாத்தறை | மாத்தறை |
| 13 | சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி | அம்பாறை வீதி, சம்மாந்துறை | அம்பாறை |
| 14 | களுத்துறை தொழில்நுட்பக் கல்லூரி | கலமுல்லை, களுத்துறை | களுத்துறை |
| 15 | வறக்காப்பொலை தொழில்நுட்பக் கல்லூரி | அம்பகல வீதி, வறக்காப்பொல | கேகாலை |
| 16 | குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி | பன்னல வீதி, குளியாப்பிட்டி | குருநாகல் |
| 17 | பாத்ததும்பறை தொழில்நுட்பக் கல்லூரி | நவயாலதென்ன, கட்டுகஸ்தோட்டை | கண்டி |
| 18 | நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி | ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா | நுவரெலியா |
| 19 | ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி | கொடகம, ஹோமாகம | கொழும்பு |
| 20 | பெலியத்தை தொழில்நுட்பக் கல்லூரி | புவக்தண்டவ, பெலியத்தை | ஹம்பாந்தோட்டை |
| 21 | ஹசலக தொழில் நுட்பக் கல்லுாரி | யோத எல வீதி, ஹசலக | கண்டி |
| 22 | தம்புள்ளை தொழில் நுட்பக் கல்லுாரி | மாத்தளை வீதி, தம்புள்ளை | மாத்தளை |
| 23 | பலப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லுாரி | வந்தது்வ புகையிரதநிலைய வீதி, பலப்பிட்டி | காலி |
| 24 | வாரியப்பொலை தொழில் நுட்பக் கல்லுாரி | சிலாபம்வீதி, வாரியப்பொலை. | குருநாகல் |
| 25 | மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லுாரி | மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| 26 | பண்டாரவளை தொழில் நுட்பக் கல்லுாரி | வேவதென்ன, பண்டாரவளை | பதுளை |
| 27 | மொனராகலை தொழில் நுட்பக் கல்லுாரி | சிறிகல, மொனராகலை | மொனராகலை |
| 28 | கம்பஹா தொழில் நுட்பக் கல்லுாரி | வெரலவத்தை, யக்கலை | கம்பஹா |
| 29 | திருகோணமலை தொழில் நுட்பக் கல்லுாரி | மிஹிந்தபுரம், திருகோணமலை | திருகோணமலை |
| 30 | தெஹியத்தகண்டி தொழில் நுட்பக் கல்லுாரி | மஹாவானவெல, தெஹியத்தகண்டி. | அம்பாறை |
| 31 | மாத்தளை தொழில் நுட்பக் கல்லுாரி | எம்.சீ. வீதி, மாத்தளை | மாத்தளை |
| 32 | வீரவிலை தொழில் நுட்பக் கல்லுாரி | புதிய நகரம், வீரவிலை. | ஹம்பாந்தோட்டை |
| 33 | மெதகம தொழில் நுட்பக் கல்லுாரி | மெதகம. | மொனராகலை |
| 34 | பொலன்னறுவை தொழில் நுட்பக் கல்லுாரி | வித்தியாபுரம், பொலன்னறுவை. | பொலன்னறுவை |
| 35 | எம்பிலிப்பிட்டி தொழில் நுட்பக் கல்லுாரி | புதிய நகரம், எம்பிலிப்பிட்டி. | இரத்தினபுரி |
| 36 | வவுனியா தொழில் நுட்பக் கல்லுாரி | மன்னார் வீதி, வவுனியா | வவுனியா. |
| 37 | அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லுாரி | பிரதான வீதி, அக்கரைப்பற்று | அம்பாறை |
| 38 | ஆணமடு தொழில் நுட்பக் கல்லுாரி | கம்முதாபூமி, தம்மன்னகம, ஆணமடுவ | புத்தளம் |
| 39 | மன்னார் தொழில் நுட்பக்கல்லுாரி | *கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பை பார்க்கவும் | மன்னார் |

* மன்னார் தொழில் நுட்பக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை "அதிபர், வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி, மன்னார் வீதி, வவுனியா" என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

தொழில் நுட்பவியல் கல்லூரிகளில் / தொழில் நுட்பக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் – கல்வியாண்டு 2014

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் / தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் / அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும். தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் முகவரிகள்)

(தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப் பட்டியலில் உள்ளன)

(ஒவ்வொரு கற்கை நெறிக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.)

1. தொழில்நுட்பவியல் கல்லூரி / தொழில்நுட்பக் கல்லூரியின் பெயர் : ..........................................
2. விண்ணப்பிக்கும் கற்கை நெறியின் பெயர் : ........................ (முழு நேரம் /பகல் / மாலை/ பகுதி நேரம்)
   போதனா மொழி : ........................ குறியீட்டு இல. ..........................
3. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: ......................................................................
4. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள்: ..........................................................................
5. நிரந்தர முகவரி: ....................................................................................................
6. தொலைபேசி இல: ...................................... இலத்திரனியல் விலாசம்: ..............................
7. தேசிய அடையாள அட்டை இல. : .....................................................................................
8. மாவட்டம்:..................... தேர்தல் தொகுதி: .......................
   கிராம அலுவலர் பிரிவு: .......................
9. பிறந்த திகதி: - ஆண்டு .................... மாதம் .................... திகதி ....................
   01.01.2014 ஆந் திகதியன்று வயது:
   .................... வருடங்கள் ....................மாதங்கள் ....................நாட்கள்:
10. ஆண் / பெண்: .....................
11. கல்வித் தகைமைகள்:-
    (அ) க.பொ.த. (சா/த) பெறுபேறுகள் (இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல்) :

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

    (ஆ) க.பொ.த.(உ/த) பெறுபேறுகள் (ஒரே தடவையில்) :

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

    (இ) க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் : ......................................................................
    (ஈ) விண்ணப்பதாரர் மேலே (அ) வில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிராவிடின் சித்தியடைந்த உயர் தரம் / ஆண்டு
    தரம் :........................ வருடம் :............................

12. மாலை நேர மற்றும் பகுதி நேர கற்கை நெறிகளுக்கு மட்டும்

தொழில் ஒரு தகைமையாகவுள்ள பயிற்சிநெறிகளுக்கு மட்டும் இப்பகுதி பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

12.1 விண்ணப்பதாரரின் பெயர்: .............................................................................

12.2 தற்போது வகிக்கும் பதவி மற்றும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி: ............................சுயதொழில் புரிபவராயின், வேலையின் தன்மை ........................................................

12.3 வேலை செய்யும் இடமும் அதன் முகவரியும்: ......................................................

12.4 ஊழியர் சேமலாப நிதி இலக்கம் (EPF) ........................................ ஊழியர் நம்பிக்கை நிதிய இலக்கம்: (ETF) ........................................மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர் எனது நிறுவனத்தில்/ அலுவலகத்தில் தொழில் புரிபவர் என நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

12.5 தொழில் தருனரின் பெயர்: ........................................................

12.6 பதவி: ........................................

12.7 கையொப்பம்: .............................. அலுவலக முத்திரை:........................

12.8 திகதி: ..........................

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- இப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு உட்பட்ட வரையில் உண்மையானவை என்றும் விண்ணப்பித்துள்ள பயிற்சி நெறிக்கு வேண்டிய தகைமைகள் எனக்கு உண்டு என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும், தொழில் நுட்பக் கல்லூரிக்கு/ தொழில் நுட்பவியல் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் திட்டத்திற்கு இணங்குவேன் என்றும் தொழில் நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது முடிவே இறுதியானது எனவும் ஏற்றுக் கொள்கின்றேன்.

| 10 ரூபா பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன் மேல் கையொப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும். |
|---|

......................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :........

**தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் /தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளின் அட்டவணை -2014**

*எந்திரவியல் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிகள்*

**முழு நேரக் கற்கைநெறிகள்**

| தொடர் இல. | குறியீட்டு எண் | கற்கை நெறியின் பெயர் | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | கற்கை நெறி நடைபெறும் தொழில்நுட்பவியல் கல்லூரி / தொழில்நுட்பக் கல்லூரி களும் ஊடக மொழியும் |
|---|---|---|---|---|
| 01 | ETB 03 | விவசாயத்தில் தேசிய டிப்ளோமா<br><br>முழு நேரம் -பகல்<br><br>இரு வருடங்கள், 06 மாதங்கள்<br><br>*தேசிய தொழில்சார் தகைமையுடன் கூடிய கற்கைநெறி (NVQ)<br><br>கற்பித்தல் முதலாம் வருடம் சிங்களம் / தமிழிலும் இரண்டாம் வருடம் ஆங்கிலத்தி லும் நடைபெறும்.<br><br>NVQ மட்டம் 5 சான்றிதழைப் பெறுவதற்கு முன்னர் NVQ மட்டம் 3/4 | 1. க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே தடவையில் விவசாயம் உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்று, அவற்றில் நான்கு திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும். நான்கு திறமைச்சித்தி களுக்கும் உரிய பாடங்கள் பின்வரு மாறு அமைதல் வேண்டும்:<br><br>முதல் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூகக் கல்வி அல்லது பின் வரும் பாடங்களில் ஒன்று: விவசாயம், வீட்டுத் தோட்டம், மிருகப் பராமரிப்பு, உணவு விஞ்ஞானமும் உணவு தொழில் நுட்பமும், (நிலத்தில்) நன்னீர் உயிரியல் வள தொழில் நுட்பம், சமுத்திரத்தில் (கடலில்) விளைகின்ற உயிரியல் மூலவள தொழில் நுட்பவியல்<br><br>அல்லது<br><br>க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் | **ஆங்கில மொழி** :<br>தம்புள்ள, குளியாப்பிட்டிய |

| தொடர் இல. | குறியீட்டு எண் | கற்கை நெறியின் பெயர் | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | கற்கை நெறி நடைபெறும் தொழில்நுட்பவியல் கல்லூரி / தொழில்நுட்பக் கல்லூரிகளும் ஊடக மொழியும் |
|---|---|---|---|---|
| | | மொடியூல்களை கட்டாயம் பூர்த்தி செய்யவேண்டிய துடன் ஒப்படைகளிலும் சித்தியடைந் திருக்க வேண்டும். | சாதாரண சித்தியாவது பெற்றிருத்தல் வேண்டும். அப்பாடங்கள் கீழ்வருவன வற்றுள் ஏதாவது மூன்று பாடங்களாக இருத்தல் வேண்டும். உயிரியல், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயம்.<br>2. 01.01.2014 இல் 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | |
| 02 | ETC 01 | கைத்தொழில் தொழில் நுட்பவியலாளர்களுக் கான தேசிய சான்றிதழ் (குடிசார் எந்திரவியல்)<br><br>முழு நேரம் - பகல்<br><br>இரு வருடங்கள்<br><br>* தேசிய தொழில்சார் தகைமையுடன் கூடிய கற்கைநெறி (NVQ)<br><br>NVQ மட்டம் 5 சான்றிதழைப் பெறுவதற்கு முன்னர் NVQ மட்டம் 3/4 மொடியூல்களை கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் ஒப்படைகளிலும் சித்தியடைந்திருக்க வேண்டும். | 1. க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுட்பட விஞ்ஞானம், கணிதம், ஊடக மொழி மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக. (ஒரே தடவையில் ஆகக் குறைந்தது 5 பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)<br><br>அல்லது<br><br>எந்திரவியல் சார் கைப்பணியாளருக் கான தேசிய சான்றிதழ் இரு வருட கற்கை நெறியொன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>ஏதேனும் எந்திரவியல் சார் கைப்பணியாளருக்கான தேசிய சான்றிதழ் பயிற்சி நெறியில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞான பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பொது உளச்சார்பு பரீட்சை மூலம் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப் படுவார்கள்.<br><br>2. 01.01.2014 இல் வயது 17 இற்கும் 29 இற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **ஆங்கில மொழி** :<br>கண்டி, இரத்மலானை |
| 03 | ETC 02 | கைத்தொழில் தொழில் நுட்பவியலாளர்களுக் கான தேசிய சான்றிதழ் (மின்னியல் மற்றும் இலத்திரனியல் எந்திரவியல்)<br><br>முழு நேரம் - பகல்<br><br>இரு வருடங்கள் | 1. க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுட்பட விஞ்ஞானம், கணிதம், ஊடக மொழி மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக. (ஒரே தடவையில் ஆகக் குறைந்தது 5 பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)<br><br>அல்லது | **ஆங்கிலம் மொழி** :<br>கண்டி, இரத்மலானை |

| *தொடர் இல.* | *குறியீட்டு எண்* | *கற்கை நெறியின் பெயர்* | *அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள்* | *கற்கை நெறி நடைபெறும் தொழில்நுட்பவியல் கல்லூரி / தொழில்நுட்பக் கல்லூரி களும் ஊடக மொழியும்* |
|---|---|---|---|---|
| | | * தேசிய தொழில் சார் தகைமையுடன் கூடிய கற்கைநெறி (NVQ)<br><br>NVQ மட்டம் 5 சான்றிதழைப் பெறுவதற்கு முன்னர் NVQ மட்டம் 3/4 மொடி-யூல்களை கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் ஒப்படைகளிலும் சித்தியடைந்திருக்க வேண்டும். | எந்திரவியல் சார் கைப்பணியாளருக் கான தேசிய சான்றிதழ் இரு வருட கற்கை நெறியொன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>ஏதேனும் எந்திரவியல் சார் கைப்பணி யாளருக்கான தேசிய சான்றிதழ் பயிற்சி நெறியில் சித்தியடைந்திருப் பதுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞான பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பொது உளச்சார்பு பரீட்சை மூலம் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப் படுவார்கள்.<br><br>2. 01.01.2014 இல் வயது 17 இற்கும் 29 இற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | |
| 04 | ETC 03 | கைத்தொழில் தொழில்நுட்பவிய லாளர்களுக்கான தேசிய சான்றிதழ் (பொறியியல் எந்திரவியல்)<br><br>முழு நேரம் -பகல்<br><br>இரு வருடங்கள்<br><br>* தேசிய தொழில் சார் தகைமயுடன் கூடிய கற்கைநெறி (NVQ)<br><br>NVQ மட்டம் 5 சான்றிதழைப் பெறுவதற்கு முன்னர் NVQ மட்டம் 3/4 மொடி-யூல்களை கட்டாயம் பூர்த்தி செய்யவேண்டிய துடன் ஒப்படை களிலும் சித்தி யடைந்திருக்க வேண்டும். | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 6 பாடங் களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுட்பட விஞ்ஞானம், கணிதம், ஊடக மொழி மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக, ஒரே தடவையில் ஆகக் குறைந்தது 5 பாடங் களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>எந்திரவியல் சார் கைப்பணியாளருக் கான தேசிய சான்றிதழ் இரு வருட கற்கை நெறியொன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>ஏதேனும் எந்திரவியல் சார் கைப்பணி யாளருக்கான தேசிய சான்றிதழ் பயிற்சி நெறியில் சித்தியடைந்திருப் பதுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞான பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>பொது உளச்சார்பு பரீட்சை மூலம் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்<br><br>2. 01.01.2014 இல் வயது 17 இற்கும் 29 இற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **ஆங்கில மொழி :** கண்டி, இரத்மலானை |

| தொடர் இல. | குறியீட்டு எண் | கற்கை நெறியின் பெயர் | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | கற்கை நெறி நடைபெறும் தொழில்நுட்பவியல் கல்லூரி / தொழில்நுட்பக் கல்லூரி களும் ஊடக மொழியும் |
|---|---|---|---|---|
| 05 | ETC 05 | எந்தரவியல் சார் படவரைவியலுக் கான தேசிய சான்றிதழ்<br><br>முழு நேரம் -பகல்<br><br>ஒரு வருடம்<br><br>* தேசிய தொழில் சார் தகைமையுடன் கூடிய கற்கைநெறி (NVQ) | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வு களில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆறுபாடங் களும் :<br><br>(அ) சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்<br>(ஆ) கணிதம், விஞ்ஞானம்.<br>(இ). வேறு மூன்று பாடங்கள்<br><br>அத்துடன்<br><br>க.பொ.த. உயர்தரத்தில் இரண்டு தடவைக்கு மேற்படாமல் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.<br><br>2. 01.01.2014 இல் வயது 17 இற்கும் 29 இற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழி**:<br>அம்பாறை, ஆணமடுவ, அநுராதபுரம், பதுளை, பலபிட்டிய, பண்டாரவளை, பெலியத்த, தம்புள்ள, தெகியத்தகண்டிய, காலி, கம்பஹா,ஹசலக, ஹோமாகம, களுத்துறை, கண்டி, கேகாலை, குளியாப்பிட்டிய, குருநாகல், மருதானை,மாத்தளை, மொனறாகலை, நுவரெலியா, பொலனறுவை, இரத்மலானை, இரத்தினபுரி, வறக்காபொல, வீரவில, எம்பிலிபிட்டிய, திருகோணமலை, மாத்தறை, வாரியபொல, பாததும்பற<br><br>**தமிழ் மொழி**:<br>மட்டக்களப்பு, சம்மாந்துறை, திருகோணமலை, வவுனியா, அக்கரைப்பற்று, யாழ்ப்பாணம். |
| 06 | ETC 07 | ஆபரண உற்பத்தியில் தேசிய சான்றிதழ்<br><br>முழு நேரம் - பகல்<br><br>ஒரு வருடம்<br><br>* தேசிய தொழில் சார் தகைமையுடன் (NVQ) இணைந்த கற்கைநெறி | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் (04) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>9ஆம் ஆண்டு சித்தியடைந்திருப் பதுடன் இது தொடர்பான துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>2. 01.01.2014 இல் 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழி** :<br>பெலியத்த, மருதானை. |
| 07 | ECC 40 | கனிஷ்ட மேற்பார்வை யாளர் நில வடிவ மைத்தலில் சான்றிதழ்<br><br>முழு நேரம் - பகல்<br><br>ஒரு வருடம்<br><br>* தேசிய தொழில் சார் தகைமையுடன் (NVQ) இணைந்த கற்கைநெறி | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்..அல்லது இலங்கை வாழ்க்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழுள்ள வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலை யங்களில் நில வடிவமைத்தல் தொழில்நுட்பவியலின் தேசிய சான்றிதழ் மட்டம் 03 இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>2. 01.01.2014 இல் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழி** :<br>பெலியத்தை, வறக்காபொல, காலி, கேகாலை |

| தொடர் இல. | குறியீட்டு எண் | கற்கை நெறியின் பெயர் | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | கற்கை நெறி நடைபெறும் தொழில்நுட்பவியல் கல்லூரி / தொழில்நுட்பக் கல்லூரி களும் ஊடக மொழியும் |
|---|---|---|---|---|
| | | **பகுதிநேர கற்கைநெறிகள்** | | |
| 08 | ETC 01.1 | தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (குடிசார் எந்திரவியல்)<br><br>பகுதி நேரம் -<br><br>மூன்று வருடம்<br><br>(உரிய துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது).<br><br>* தேசிய தொழில் சார் தகைமை (NVQ) யுடன் கூடிய கற்கை நெறி<br><br>கற்பித்தல் முதலாம் வருடம் சிங்களம் /தமிழிலும் இரண்டாம் வருடம் ஆங்கிலத்திலும் இடம்பெறும். | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆறு (06) பாடங்களும் பின்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.<br><br>(அ) சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்<br>(ஆ) கணிதம், விஞ்ஞானம்<br>(இ) வேறு மூன்று பாடங்கள்<br><br>அல்லது<br><br>அதற்கு சமமான தகைமைகள்<br><br>2. 01.01.2014 ஆந் திகதியன்று 17 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். | **ஆங்கில மொழி :**<br>அம்பாறை, அநுராதபுரம், பதுளை, பலபிட்டிய, பெலியத்த, தம்புள்ள, எம்பிலிப்பிட்டிய, காலி, கம்பஹா, ஹசலக, ஹோமாகம, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மருதானை, மாத்தறை, மொனறாகலை, நுவரெலியா, மாத்தளை, பொலனறுவை, இரத்மலானை, இரத்தினபுரி, வறக்காபொல, வீரவில, திருகோணமலை, ஆனமடுவ, பண்டாரவளை, குளியாப்பிட்டிய, மட்டக்களப்பு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, வவுனியா, யாழ்ப்பாணம் |
